பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 10 செவ்வாய்க்கிழமை (26.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## நாடு திரும்பினார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச்சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து நேற்று முற்பகல் நாடு திரும்பினார். 23

## எரிவாயுவின் விலை நள்ளிரவுடன் அதிகரிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 110 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று நேற்று நள்ளிரவு முதல் 110 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எரிவாயு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (மு-11)

# நாடு பிளவுபடாமல் இருப்பதற்கு அதிகார பரவலாக்கம் மிக அவசியம்

## தெற்கில் இருந்து கருத்து வெளிப்பாடு



(கொழும்பு) உலகில் அதிகாரத்தை பகிர்ந்துகொண்ட நாடுகள் பிரிவைத் தடுத்துக்கொண்டுள்ளதுடன் அதிகாரத்தைச் சேர்த்துக்கொண்ட நாடுகள் பிரிந்து சென்றுள்ளன. எனவே எமது நாட்டில் புதிதாக அமையும் அரசியல் யாப்பு 30 வருட கசப்பான கடந்த காலத்தை மீண்டும் உருவாக்காத ஒன்றாக இருக்க வேண்டும். நாடு பிளவுபடாமல் இருப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் மிக முக்கியமானதென பிரபல ஊடகவியலாளரும் விரிவுரையாளருமான காமினி வியன்கொட தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தியாக தீபம் திலீபனின் இறுதிநாள் நினைவேந்தல் இன்று



24

## கைதியை தாக்கியதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்மீது மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சிறையில் இருக்கும் தந்தையை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தாக்கியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. புத்தளத்தை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் குற்றச் 23

## காங்கேசன்துறை தையிட்டியில் ஒரு தொகுதி வெடிபொருள் மீட்பு



(இளவாலை)

காங்கேசன்துறை பொலிஸார் ஒரு தொகை வெடிபொருட்களை நேற்று ஜெ/247 கிராம அலுவலகத்துக்கு உட்பட்ட தையிட்டி கிழக்கு விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள கிணறு ஒன்றிலிருந்து கைப்பற்றியுள்ளனர். 24

## இடைக்கால வரைபை ஆராய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று விசேடமாக கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய இடைக்கால வரைபு தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று கூடுகிறது. இன்று கூடுகின்ற பல்கலைக்கழக ஆசிரியர் சங்க கூட் 24

## நாடு பூராக பரபரப்பை ஏற்படுத்திய வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு நாளை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு நீதாய விளக்க நீதிபதிகளால் நாளைய தினம் அறிவிக்கப்படவுள்ளது.

புங்குடுதீவு பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி பாடசாலை சென்ற மாணவி 24

## நீதிமன்றத்தால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது - சம்பிக்க

(கொழும்பு)

நீதிமன்றத்தால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு - காலி முகத்திடலில் நேற்று நடைபெற்ற நிகழ் 23



## கர்ப்பிணி படுகொலை இரத்த மாதிரிகள் நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை வழக்கின் இரத்த மாதிரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையானது நீதிமன்றில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கானது நேற்று 23

## மக்கள் கருத்துக்களம்

அன்பு வாசகர்களே...!

இடைக்கால வரைபு தொடர்பில்

உங்கள் கருத்துக்களை முன்வையுங்கள்.

உங்கள் கருத்துக்களை அனுப்ப...

வைபர் செயலி : 076 636 3378
தொலைபேசி : 021 567 1530
மின்னஞ்சல் : valampurii@yahoo.com
தபால் : ஆசிரியர், வலம்புரி, யாழ்ப்பாணம்.

## வடமராட்சி பகுதியில் 16 கிலோ கஞ்சா மீட்பு இளைஞன் ஒருவர் கைது



24

## லலித் ஜயசிங்க மீண்டும் கைது

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு கஹவத்த பகுதியில் இடம்பெற்ற கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பெல்மதுளை நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக 23

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. ஜெகநாதன் ஞானசீலன்

(SLPS III)

(பிரதி அதிபர் - யா/ஏழாலை ம.வி)

எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றி இன்று (26.09.2017) செவ்வாய்க்கிழமை BMICH இல் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (ஆரம்பப்பிரிவு) இற்கான நியமனம் பெறுகின்ற திரு. ஜெகநாதன் ஞானசீலன் அவர்களை பாராட்டி மகிழ்வதுடன் மேலும் அவரது கல்விப் பணி சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ஏழாலை மகா வித்தியாலயம்.**

(694)

# அன்பு வாசகர்களே!

மாணவி வித்தியா கொலை தொடர்பிலான தீர்ப்பு வெளிவர இருப்பதால் புருசோத்தமன் எழுதும் தமிழர் தலைவிதி அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் வெளிவரும். (ஆ-ர்)

# 9 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிப்பு

மதுபோதையில் முச்சக்கரவண்டி செலுத்திய நபருக்கு 9ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளார். கடந்த 24ஆம் திகதி காங்கேசன்துறை தல்செவன பகுதியில் மதுபோதையில் முச்சக்கரவண்டி செலுத்திய நபர் கடந்த 24-ம் திகதி காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போது 9 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்ததோடு குறித்த நபரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை 4மாத காலத்துக்கு இரத்துச் செய்யவும் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (மு-10-104)


## கோழிக்குஞ்சுகள் விற்பனை

கிளிநொச்சியில்...
புறொயிலர் கோழிக்குஞ்சு - 01 - 95/=
ஊர்க் கோழிக்குஞ்சு - 01- 75/=
**தொடர்பு: 0779337287**
(சி-9748)

## RP Rent a Car

கார்கள்; வான்கள் நாள், மாத வாடகைக்கு சாரதியுடன் அல்லது சாரதி அல்லாமல் பெற்றுக் கொள்ளலாம்.



**தொடர்பு: 077 029 5211**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# பெறுகை அறிவித்தல்

## பருத்தித்துறை நகரசபை

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை - 2017

01. தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகையானது பொது நிதிச் சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வட மாகாணத்தில் தகுதியுடைய வியாபாரம் அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதிப் புனரமைப்பிற்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

05. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி:- 2017.09.27 ந் திகதி தொடக்கம் 2017.10.10 ந் திகதி பி.ப.15.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1170/= (VAT, NBT உட்பட) இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 2017.10.11ந் திகதி 15.00 மணிவரை. பெறுகைகள் திறக்கப்படும் திகதி: 2017.10.11ந் திகதி 15.30 மணி (பெறுகைப் பத்திரம் திறக்கப்படும் சமயம் பெறுகையினை சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)

07. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

08. பெறுகை தொடர்பான முதற்கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2017.10.04ந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியன் ரூபாயில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | பெறுகைப் பிணைவைப்பு (மீளளிக்கப்படக் கூடியது) |
|---|---|---|---|---|---|
| 01. | சக்திகோவில் வீதி புனரமைப்பு (கொங்கிறீற்) | 2.405 | 1 1/2 மாதங்கள் | C8 | 27000.00 |
| 02. | கோணந்தீவு,கல்லூரி வீதி இணைப்பு வீதி (மிகுதி வேலை) புனரமைப்பு (கொங்கிறீற்) | 1.212 | 1 மாதம் | C9 | 14000.00 |

புவனேந்திரன் ரமேஸ்வரன்,
தவிசாளர்
உள்ளூராட்சிமன்ற
பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.
26.09.2017

(சி-9749)

# பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

### பேருந்துச் சாரதி :

தகைமைகள்:

01. சகல வாகனங்களும் செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் (Heavy Vehicle License- AD வகை ) கொண்டிருத்தல்.

02. மலைநாடு, கண்டி, கொழும்பு உட்பட இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் பேருந்து உட்பட கனரக வாகனம் செலுத்தக்கூடிய அனுபவமும் சேவை மனப்பான்மையும் ஒழுக்கமும் கொண்டவராகவும் இருப்பதுடன் குடிவகை பாவிப்பவராக இருத்தல் கூடாது.

03. இல்லத்தில் தங்கியிருந்து இல்லத் தேவைகளுக்கு பேருந்தை எந்த நேரமும் ஓடக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. 35-50 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

05. சம்பளம் ரூபா 25,000/= ற்கு குறையாது மாதாந்தம் வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்பு செய்யப்படும்.

### ஆட்டோ சாரதி :

தகைமைகள்:

01. முச்சக்கர வண்டி செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் (Light Vehicle License) கொண்டிருத்தல் வேண்டும்.

02. இல்லத்தில் தங்கியிருந்து இல்லத் தேவைகளுக்கு முச்சக்கர வண்டி ஓடக்கூடியவர்.

03. 35-50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

04. முச்சக்கர வண்டி செலுத்துவதில் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.

05. மதுபோதைப் பாவனை அற்றவராக இருப்பதுடன் ஆசாரசீலராக ஒழுக்கம் பேணி நடக்க வேண்டும்.

06. சம்பளம் ரூபா 23,000/= வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்பு செய்யப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சாரதி பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப் பத்திரங்களின் நிழற் பிரதிகளுடன் 10.10.2017ற்கு முன்னர் பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கிராமசேவையாளர் உதவி அரச அதிபர் குணநல நற்சான்றிதழ் வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :**

**தி. இராசநாயகம், தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி**
**தொ.பே. இல.: 0770604950, 0214923118**
**மின்னஞ்சல் முகவரி : rasa46@yahoo.com**


(சி-9750)

# போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக புதிய கொள்கை வகுக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு கொள்கை ஒன்றை வகுக்கவுள்ளது என பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன தெரிவித்துள்ளார். குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட படையினர் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.**



கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள செவ்வியில், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போகச் செய்யப்பட்டமை உள்ளிட்ட குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

அதேவேளை, ஆயுதப் படையினர் துன்புறுத்தப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படுவர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கைப் படையினர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி கூறவில்லை.

"குற்றங்களில் ஈடுபட்டவர்கள், உயர்நிலை அல்லது கீழ்நிலை அதிகாரியாக இருந்தாலும் சரி, சட்டத்தை எதிர்கொள்ள வேண்டும் என்றே அவர் கூறியிருக்கிறார். லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட வழக்குகள், சரியான முறையில் சட்ட ரீதியாக, இடம்பெறுகின்றன.

தமது ஆணையை விட்டு விலகிச் செயற்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால், இலங்கைப் படையினருக்கு விலக்கு அளிக்கப்படாது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு கொள்கை ஒன்றை வகுக்கவுள்ளது. அது வேறுபட்ட செயல்முறையாக இருக்கும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை 8.45 மணியளவில் இலங்கையை வந்தடைந்தார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 72 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வில் உரையாற்றியதுடன் பல்வேறு முக்கியஸ்தர்களையும் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

குறிப்பாக, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்களை சந்தித்து இருதரப்பு உறவு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாடியிருந்தார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஆகியோரையும் இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வில் மேலும் சில அமர்வுகளிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஆகியோர் ஏற்பாடு செய்த வரவேற்பு நிகழ்வுகளிலும் ஜனாதிபதி பங்கேற்றிருந்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் இருப்பதற்காகவும் மனித உரிமையையும் சுதந்திரத்தையும் பலப்படுத்துவதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும் இலங்கை அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஆகியோரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். (இ-7)

# நாடு பிளவுபடாது; பௌத்தம் முன்னுரிமையை இழக்காது

## அமைச்சர் ருவான் தெரிவிப்பு



புதிய அரசியலமைப்பில் முன்மொழியப்பட்டுள்ளது ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு தொடர்பான யோசனையே என இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன் எதிரணியினர் குற்றம்சாட்டுவது போல நாடு இரண்டாகப் பிளவுபடப் போவதும் இல்லை, பௌத்த மதத்திற்கு உரிய இடம் வழங்கப்படாது விடப்படப் போவதுமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய சிறுபான்மை கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தெல்கொட பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ருவான் விஜேவர்த்தன மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)



# பதில் பொலிஸ்மா அதிபர் நேற்று பொலிஸ்மா அதிபரால் நியமனம்

## சீனா பயணமானார் பூஜித

சீனாவில் இடம்பெறும் சர்வதேச பொலிஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர நேற்று சீனாவுக்குப் பயணமானார்.

எதிர்வரும் 30ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார்.

அதுவரையிலும் பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்கிரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

# தர்கா நகரில் இரு குழுக்களிடையே மோதல் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கம்



அளுத்கம, தர்காநகர் வெலிபிடியவில் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் வெட்டுக் குத்துக் காயங்களுக்கு இலக்காகிய இருவர் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரச்சினைக்கு காரணமானவரின் வீடும் தாக்கப்பட்டுள்ளதாகவும் இப்பிரதேசத்துக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இரு இளைஞர்களும் தர்காநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் களுத்துறை நாகொட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.


ஒருவரின் தலையில் வாள் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும், தற்பொழுது அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போதைப் பொருள் சம்பந்தப்பட்ட விடயமே மோதலுக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் சிலருக்கு இன்னுமொரு குழுவினர் இவ்வாறான தவறைச் செய்ய வேண்டாம் என அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் இதனால் கோபமடைந்த சம்பந்தப்பட்ட குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார். (இ-7)

## 53 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார் மொயின் அலி

# இங்கிலாந்திடம் வீழ்ந்தது மேற்கிந்தியத் தீவுகள்



மொயீன் அலி 53 பந்துகளில் சதம் விளாசி அசத்த, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி 65 பந்துகள் மீதமிருக்கையில் 124 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள், அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகள் முடிவில் இங்கிலாந்து 1-0 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் மூன்றாவது ஒரு நாள் போட்டி நேற்றுமுன்தினம் பிரிஸ்டலில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு பேர்ஸ்டோவ் (13) சொதப்பினார். மிகுல் கம்மின்ஸ் பந்தில் ஹேல்ஸ் (36) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் மோர்கன் டக்-அவுட்டானார். ஜோ ரூட், ஸ்டோக்ஸ் அரை சதம் கடந்தனர். ஸ்டோக்ஸ் 73 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கம்மின்ஸ் பந்தில் ரூட் (84) ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி 34.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களை எடுத்திருந்தது.

### மொயீன் அபார சதம்

இதன்பின்தான் ஆட்டத்தில் சூடு பிடித்தது. மொயீன் அலி அதிரடி காட்ட ஆரம்பித்தார். கம்மின்ஸ் வீசிய 45ஆவது ஓவரில் 3 சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்தார். தொடர்ந்து அசத்திய இவர், ஹோல்டர் வீசிய அடுத்த ஓவரிலும் 'ஹட்ரிக்' சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசினார்.

இதன்மூலம் 53ஆவது பந்தில் சதம் அடித்து அசத்திய இவர், 102 ஓட்டங்களில் (57 பந்து, 7 பவுண்டரிகள், 8 சிக்ஸர்) ஆட்டமிழந்தார். வோக்ஸ் 34 ஓட்டங்களில்



கிளம்ப, இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 369 ஓட்டங் களை எடுத்தது. வில்லே (1), ரஷித் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### ஹெயில் அதிரடி

கடின இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு லீவிஸ் (13), ஹோப் (20) கைகொடுக்க தவறினர். எனினும் ரன் மெசின் கிறிஸ் ஹெயில் இங்கிலாந்து பந்துவீச்சை சிதறடித்தார். 78 பந்துகளில் 9 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக 94 ஓட்டங்களுடன் ரன்-அவுட்டானார். ரஷித் 'சுழலில்' அணித தலைவர் ஹோல்டர் (34) சிக்கினார். மற்றையவர்களும் ஏமாற்ற,

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 39.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 124 ஓட்டங்களால் வீழ்ந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் அதிகபட்சமாக பிளங்கெட் 52 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை அள்ளினார்.

இவ்வெற்றி மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.


போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் மொயின் அலி தெரிவானார்.

### 2ஆவது வீரர்

ஒரு நாள் அரங்கில் அதிவேக சதம் அடித்த இரண்டாவது இங்கிலாந்து வீரரானார் மொயீன் அலி. இதற்கு முன், பட்லர் 46 பந்துகளில் (எதிர் - பாக்., 2015, டுபாய்) சதம் விளாசி இருந்தார்.

## கைவிரல் முறிவு

# நாடு திரும்புகிறார் ஏகர்



இந்தூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியாவிற்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் களத்தடுப்புச் செய்யும்போது காயம் அடைந்த அவுஸ்திரேலிய வீரர் அஷ்டன் ஏகர் நாடு திரும்புகிறார்.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3ஆவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் இந்தூரில் நடைபெற்றது.

294 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா துடுப்பாட்டம் செய்தது. அப்போது பவுண்டரி கோடு அருகில் களத்தடுப்புச் செய்த சுழற்பந்து வீச்சாளர் அஷ்டன் ஏகரின் வலது கையின் சுண்டு விரலில் முறிவு ஏற்பட்டது.

இடது கை சுழற்பந்து வீச்சாள்ர் என்பதால் அப்போட்டியில் தொடர்ந்து பந்து வீசினார். அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து மூன்று போட்டிகளில் தோல்வியடைந்து தொடரை இழந்ததால், மீதமுள்ள இரண்டு போட்டிகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படவில்லை. இதனால் அஷ்டன் ஏகர் நாடு திரும்புகிறார்.


"போட்டி முடிந்த பின்னர் எக்ஸ்-ரே எடுத்து பார்க்கப்பட்டது. அப்போது அவரது கைவிரலில் முறிவு ஏற்பட்டது உறுதி செய்யப்பட்டது. உடனடியாக அவுஸ்திரேலியா செல்லும் அஷ்டன் ஏகர், வல்லுனர்களுடன் ஆலோசனை பெறுகிறார். பெரும்பாலும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வாய்ப்புள்ளது" என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அஷ்டன் ஏகருக்குப் பதிலாக மாற்று வீரர் அறிவிக்கப்படவில்லை. இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 4ஆவது போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி பெங்களூருவிலும் 5ஆவது போட்டி ஒக்டோபர் முதலாம் திகதி நாக்பூரிலும் நடக்கிறது.

## மெக்சிக்கோ நிலநடுக்கம்

## உயிரிழந்த இளவயது இரசிகனுக்கு

# ரொனால்டோ இரங்கல்




மெக்சிகோவில் 7.1 ரிக்டர் அளவில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தில் உயிரிழந்த தீவிர ரசிகனான சிறுவனுக்கு கிறிஸ்டியானோ ரொனால்டோ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

மெக்சிகோவில் கடந்த சில நாட்களுக்கு முன் 7.1 ரிக்டர் அளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சுமார் 300க்கு மேற்பட்டோர் பலியானார்கள். ஒரு பாடசாலை இடிந்து விழுந்தது. இதில் 20க்கும் மேற்பட்ட பள்ளிச் சிறுவர்கள் உயிரிழந்தனர். அதில் ஒருவன் சான்டியாகோ பிளோர்ஸ் மோராவும் ஒருவர்.

இவன் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் தவிர ரசிகனாக இருந்துள்ளார். அவரை ஒரு ஐடியாலாஜியாக வைத்து வளர்ந்துள்ளார்.

இதுகுறித்து சான்டியாகோ பிளோர்ஸின் அம்மா ரொனால்டோவிற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் கூறுகையில், "எனது மகன் உங்களுடைய தீவிரமான ரசிகனாக இருந்தான். எங்கேயும் உங்களுடைய பெயரைத்தான் எழுதுவான். இறப்பதற்கு முன்பாக பாடசாலை நோட்டில் சான்டியாகோ பிளோர்ஸ் மோரா கிறிஸ்டியானோ ரொனால்டோ என்று எழுதியிருந்தான்.

எனது மகனுடைய கனவே உங்களை சந்திக்க வேண்டும் என்பதுதான். உங்களை பார்க்க வரவேண்டிய எனது மகன், தற்போது கடவுளோடு சென்றுவிட்டான். நாங்கள் பண உதவியோ, புகழோ அல்லது கவனத்தை ஏற்படுத்தவோ விரும்பவில்லை. ஒரே விடயம், கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது மகன் குறித்து அறிய வேண்டும் என்பதுதான். ஏனென்றால், துரதிர்ஷ்டவசமாக அவனது கனவு நிறைவேறவில்லை.

இந்த அம்மாவின் கடிதம் சமூக இணையதளங்கள் மூலம் கிறிஸ்டியானோ ரொனால்டோ கவனத்திற்கு சென்றது.

இதனால் மிகவும் வருத்தம் அடைந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, ரியல் மட்ரிட் அணிக்காக அணிந்து விளையாடும் தனது ஜெர்சியில் "பாசமிகு எனது நம்பர் வன் ரசிகன் சான்டியாகோவிற்காக" என்று குறிப்பிட்டுள்ளார்.



சர்வதேச செவிப்புலனற்றோர் தினம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கலந்துகொண்டிருந்தார். நாட்டின் சகல பாகங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் : உ.சாளின்)

# ஜனாதிபதி மைத்திரியின் வரலாறு நாமல் கையில்

(கொழும்பு)

அண்மையில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா சிறிசேனவினால் எழுதப்பட்ட புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்க்கை உள்ளடக்கிய இந்த புத்தகம் "ஜனாதிபதி தந்தை" என்ற பெயரில் வெளியாகியது.



இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவினால் இந்த புத்தகம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியின் போது அவர் இந்த புத்தகத்தை கொள்வனவு செய்யும் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. (இ-7)


## ஏல விற்பனை

யா/அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தில் வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் படி பயன்பாடற்ற பொருட்கள் 10.10.2017 செவ்வாய் மு.ப 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும் என்பதனைத் தெரியப்படுத்துகிறோம். விருப்பமானவர்களை இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதிபர்



## கண்ணீர் அஞ்சலி

அமரர். திருமதி.

**செல்வரட்ணம் அருளம்மா**



எமது பாடசாலை ஆசிரியை
செல்வி.செ.செல்வறூபா
அவர்களின்
பாசமிகு தாயார்
செல்வரட்ணம் அருளம்மா
அவர்களின்
பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயம், அச்சுவேலி. (685) பாடசாலைச் சமூகம்.



## வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

### வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வட பிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக் கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலை பேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுன்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.09.2017 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பிரதம ஆசிரியர், வலம்புரி.


## இராசி பலன்

26.09.2017
(புரட்டாதி 10, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 4.34 மணிவரை
அனுசம் காலை 7.58 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 30.02-04.32 மணிவரை
சஷ்டி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை | | ராகு |
| கேது | | | செவ், சுக் |
| | சனி, சந் | குரு | சூரி, புத |

**மேடம்** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, வீண் விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன்களை தீர்க்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** உறவினர் பகை அகலும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** ஆசைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவுதர முன்வருவர், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நண்பர்களால் ஆதாயமுண்டு, தேகநலன் சீராகும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

# அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்

## அமைச்சர் ராஜித யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு விடயத்தில் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் அதிகாரப் பகிர்வுக்கு முழுமையாக ஆதரவு தந்திருப்பதே எமக்கு கிடைத்த வெற்றி என தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஜனாதிபதியிடம் உள்ள அதிகாரத்தை குறைப்பதற்கு மாத்திரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர் பிரிவு கட்டடத் தொகுதியை திறந்து வைத்த பின்னர் அங்கு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் மிக மோசமான காலப் பகுதியிலும் நான் வந்திருக்கின்றேன். இங்கு கிளர்ச்சிகார தலைவர்களுடனும் பேசியுள்ளேன். அவர்களைச் சந்தித்துள்ளேன். இப்போது சுதந்திரமாக இருக்கின்றது. ஆனாலும் இங்குள்ள பல பிரச்சினைகளை நாம் தீர்த்து வைக்க வேண்டியுள்ளது. குறிப்பாக வடபகுதி மக்களது நிலங்கள், காணாமல் போனோர் விடயங்கள், அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டி உள்ளது. இவ்வாறான நிலையில் தற்போது சுகாதார சேவைகளை மிகச் சிறப்பாக கட்டியெழுப்பி வருகின்றோம். எமது நோக்கம் 2020ஆம் ஆண்டாகும் போது சிறப்பான சுகாதார சேவையினை வழங்க வேண்டும் என்பதேயாகும் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அமைச்சரிடம் கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியிருந்தார். அதற்கு அவர் பதிலளிக்கையில்; சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பாக அரசியல் கட்சிகள் கலந்துரையாடி ஓர் இறுதி முடிவுக்கு வருவார்கள். அக் கட்சிகளுடைய கருத்துக்களை இரண்டு வாரங்



களுக்குள் பெற்று அரசியலமைப்பை இறுதியாக்கலாம் என எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகளுக்கு உடன்பட்டிருக்கின்றது. ஒரே ஒரு விடயத்தில் மாத்திரமே அக் கட்சியானது ஏனைய கட்சிகளிலிருந்து வேறுபட்டுள்ளது. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பற்றிய விடயத்திலே

யேயாகும். குறித்த நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டுமா? இல்லையா? அல்லது அது இருந்தால் அது என்ன வடிவத்தில் இருக்க வேண்டும்? ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டுமா? அல்லது பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட வேண்டுமா? அல்லது ஜனாதிபதி முறையை நீக்க வேண்டுமா? என்ற விடயத்திலேயாகும்.

ஆனாலும் சுதந்திரக் கட்சி அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகளை ஆதரித்துக்கொண்டிருப்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. எனவே பிரதான இரண்டு கட்சிகளுமே அதிகாரப்பகிர்வு விடயத்தில் முதன் முதலாக உடன்பட்டுக்கொண்டிருப்பது புதிய அரசியலமைப்பு முயற்சிகளில் நாம் பெற்றுக்கொண்டுள்ள முதலாவது வெற்றியாகும் எனத் தெரிவித்தார். (இ-4)

## புதிய கட்டடம் திறப்பு



கெருடாவில் நற்பணி மன்றத்திற்காக அமைக்கப்பட்ட கட்டடத்தை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் திறந்து வைத்தார். மேற்படி நற்பணி மன்றத்திற்கு பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து இரண்டு இலட்சம் ரூபாய்கள் செலவில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நற்பணி மன்றத்தலைவர் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது. (இ-60)

## வாழ்வகத்தில் வாணி விழா

விழிப்புல வலுவிழந்தோர் இல்லமான வாழ்வகத்தின் வாணி விழா நாளை 27ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் இடம்பெறும். வாழ்வக மாணவன் திருஸ்ரீதரன் யோகதாஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் "கலைகள் அருள்வாய் கலைவாணி" எனும் தலைப்பில் யாழ். புனித பத்திசிரியார் கல்லூரி ஆசிரியர் சிவநெறிப்பிரியன் மு.நித்தியானந்தன் சிறப்புச் சொற்பொழி வாற்றுவார். (இ-3)

## கணனிப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் கணனிப்பயிற்சி நெறிக்காக (Website Designing Techniques Computer Networking Techniques) பதிவு செய்து கொண்ட பயனாளிகளுக்கான பயிற்சி நெறிகள் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகுமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

### காணாமல் போனோரின் உறவினர்கள்

## ஏமாற்றம்

காணாமல் போனோரின் உறவினர்கள் தம்மை அமைச்சர் ராஜித சந்திப்பார் என எதிர்பார்த்து காத்திருந்து ஏமாற்றமடைந்தனர். மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டடம் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவால் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவின் பின்னர் நிகழ்வுகள் நடைபெறுவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடையின் எதிர்ப்புறத்தே காணாமல் போனோரின் உறவினர்களினால் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இந்நிலையில் அப்பகுதிக்கு வருகை தந்த அமைச்சர், பிரதி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் தம்மை சந்திப்பார்கள் என காணாமல் போனோரின் உறவினர்கள் காத்திருந்தனர். ஆனால் எதுவித கரிசனையும் காட்டாத அமைச்சர் குழுவினர் தமது வாகனத்தில் ஏறிச் சென்றனர். (இ-60)

## திருட்டு!

யாருமற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தொலைக்காட்சிப்பெட்டி, CD player, சிறுதொகைப் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றனர். இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை புற்றளை சித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்களின் வீட்டில் இடம்பெற்றது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## மருத்துவ உபகரணக் கண்காட்சி குறித்து யாழ். வணிகர் கழகம் விசேட அறிவிப்பு

2018 பெப்ரவரி 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை பெங்களூர் நகரில் நடைபெறவிருக்கும் இந்தியாவின் மருத்துவ உற்பத்தியாளர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்வோர் பங்குபற்றும் மாபெரும் கண்காட்சி ஒன்று நடைபெறவிருப்பதாகவும் இதில் பங்குபற்றுவதன் மூலம் மருந்துகள் விற்பதிலும் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக பயனைப் பெற முடியும் எனவும் இந்தியத்துணைத்தூதர் யாழ்.வணிகர் கழகத்திற்கு அறியத்தந்துள்ளார்.

மேற்படி துறைகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளவர்கள் இக் கண்காட்சியில் பங்குபற்றினால் அவர்களுக்கு உணவு வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதியும் விமான நிலையத்திலிருந்து போக்குவரத்து வசதியும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் விமான பயணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

இவ் அரிய வாய்ப்பைப் பெற விரும்பும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றின் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யாழ். வணிகர் கழகத்திலிருந்து பெறக்கூடிய விண்ணப் பப்படிவங்களில் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு 021 222 8593 என்ற யாழ். வணிகர் கழகத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும்

அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகா சபையின் முன்னாள் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.சி.சுப்பிரமணியத்தின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் அகில இலங்கைசிறுபான்மை தமிழர் மகா சபையின் தலைவர் வி.ஜெ. அன்ரனி தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி., மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-108)

## நவராத்திரி விழா இன்று

வலி.கிழக்கு பிரதேச சபை (கோப்பாய்) உப அலுவலகத்தின் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் உப அலுவலக மண்டபத்தில் பொறுப்பதிகாரி வை.கனகராசா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் புவநாஜா ஜெலீபன், கௌரவ விருந்தினர்களாக புத்தூர் உப அலுவலகப் பொறுப்பதிகாரி மு.தயாபரக் குருக்கள், அச்சுவேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி த.சிவசுதன், நீர்வேலி உப அலுவலகப் பெறுப்பதிகாரி ப.ஸ்ரீகாந்தா, உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி ப.உதயகுமார், நீர்வேலி உப அலுவலக முன்னாள் பொறுப்பதிகாரி சி.தவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-3)

## திலீபன் நினைவாக இரத்ததான நிகழ்வு

தியாக தீபம் திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும். கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 8 மணி முதல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெறும். இந்த இரத்ததான நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணியில் இணைந்து கொள்ளுமாறு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-3)

## அரசியல் கைதிகள் மூவர் மீண்டும் உணவு தவிர்ப்பு

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மேற்படி உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது-40), கரணவாயைச் சேர்ந்த மதியரசன் சுலக்சன் (வயது-30), நாவலப் பிட்டியைச் சேர்ந்த கணேசன் தர்சன் (வயது-26) ஆகியோருக்கு எதிராக கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தெற்கிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.

எனவே மீண்டும் வேறு நீதிமன்றங்களுக்கு குறித்த வழக்கை மாற்றினால் தொடர்ச்சியாக இந்த வழக்கு இடம்பெறும் என்றும் இது தண்டனை இல்லாமல் தண்டனை கொடுக்கும் நடவடிக்கையாகும் இது அரசியல்கைதிகளைப் பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்து தமது வழக்கு வவுனியாவிலேயே நடைபெற வேண்டும் என்றும் வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக்கூடாது என்றும் தெரிவித்து கடந்த மாதம் உணவு தவிர்ப்பை மேற்கொண்டிருந்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்காத காரணத்தினால் வழக்கு விசாரணையை வவுனியா நீதிமன்றிலேயே ஆரம்பிக்கவுள்ளதாக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தமையை அடுத்து தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இடைநிறுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் கடந்த வாரம் அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே குறித்த கைதிகள், தமக்கு எதிராக இதுவரை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படவில்லை, அவ்வாறு விசாரணைகள் மேற்கொள்ளப்படுமிடத்து யாழ்ப்பாணம், வவுனியாவுக்கு தமது வழக்குகளை மாற்றுமாறு கோரி தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மீள ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்

# மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! மனிதர்களின் மனங்கள் திறக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!

தியாகி திலீபனின் முப்பதாவது நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் அந்த மாவீரனின் தியாகம், அந்தச் செய்தியின் உண்மைத்தன்மை இன்றும் எங்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இந்தியாவை ஈழத்தமிழர்கள் தமது தாய் நாடாகப் போற்றி வாழ்ந்து வந்த நேரத்தில் தான் தந்திரமானவர் எனப் பெயர்பெற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பிடிக்குள் சிக்குப்பட்ட ராஜீவ்காந்தியினால் அனுப்பி வைக்கப்பட்ட இந்திய அரச படைகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மூலைமுடுக்கெங்கும் குவிக்கப்பட்ட பொழுது இலங்கையின் இறைமை பறித்தெடுக்கப்பட்டது. அதேவேளை இலங்கை இராணுவ முகாம்களும் மறைமுகமாக ஒருபுறம் அதிகரிக்கப்பட்டு வந்தன. இந்தியப்படைகளின் தாக்குதல்களால் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதைகள் செய்யப்பட்டனர். இந்த நிலையில் தான் லெப்டினன்ட் கேணல் திலீபனின் அகிம்சைப்போராட்ட வடிவம் உலகப் போராட்ட வரலாறுகளின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அன்று இந்திய அரசுக்கு ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து நீர்கூட அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதமிருக்கத் தொடங்கிய பொழுது. நல்லூர் ஆலய வீதியில் குழுமி நின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் உறுதியுடன் கூறிய அந்த வாசகங்கள் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் சுதுமலையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் அன்று கூறிய அந்தத் தீர்க்க தரிசனம் மிக்க கருத்தையே தனது சாவின் விளிம்பில் இருந்து கொண்டு திலீபனும் பேசியிருந்தான். 'இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினால் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் கிட்டாது' என்று சுதுமலையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் தலைவர் பேசியது போன்றே தியாகி திலீபனின் அன்றைய உரையும் அமைந்திருந்தது. சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தேசியத்தலைவர் தமிழ்நாட்டில் ஆரம்பித்த பொழுது, 48 மணி நேரத்திற்குள் இந்திய அரசு இறங்கி வந்து, அவரிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்ட தொலைத் தொடர்புச் சாதனங்கள் போன்றவற்றைத் தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே கொண்டு வந்து கையளித்த பின்னர் தான் தன்னுடைய உண்ணா நோன்பை முடித்தார்.

அன்று இந்திய அரசு பணிந்து வந்தமைக்கு அகிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பளித்து எங்கே பிரபாகரன் அவர்களின் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் இறுதியில் அவரின் உயிரைப் பறிக்கும் நிலை தமிழ் நாட்டில் ஏற்படுமாயின் தமிழகம் கொதித்தெழும்! அதனால் இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் ஆட்டம் காணும் நிலை ஏற்படும் என்ற அச்சத்தினாலேயே இந்திய அரசு கீழே இறங்கி வந்தது. தமிழக மக்களின் உணர்வுகள் வெடித்தால் இந்தியாவில் இன்னுமொரு போர்முனை திறக்கப்பட்டு விடும் என்ற பயமே காரணம். அதேவேளை ஈழத்தில் திலீபனின் மரணத்தால் எதுவுமே நடைபெறாது என்ற நம்பிக்கை இந்திய அரசிடம் இருந்ததால் திலீபனை இந்திய அரசு சாகடித்தது!

தனது உயிரே போனாலும் அடக்குமுறைக்குப் பணியப்போவதில்லை என்ற தேசியத் தலைவரிடம் அன்று இருந்த உறுதியான வெளிப்பாடுதான் திலீபனிடமும் பதிந்திருந்தது. அன்று தானே முன்னின்று வழிகாட்டிய பாதையில். திலீபன் பின் தொடர்ந்து போராடினான்.

1987இல். "ஒரு துளி நீர்கூட அருந்தாமல், தனது உண்ணா நோன்பை ஆரம்பிக்கப் போவதாகத் திலீபன் அறிவித்ததும், தலைவர் பிரபாகரன் திலீபனிடம் சென்று அருகில் இருந்து அவனது தலையை வருடியபடி "தண்ணீரையாவது குடித்து உண்ணாவிரதத்தைத் தொடரலாம்"- என்று திலீபனைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் திலீபனோ தலைவரைப் பார்த்து சிரித்துக் கொண்டே "அண்ணா, நீங்கள் அப்படிச் செய்யவில்லையே? நீங்களும் தண்ணீர் கூட அருந்தாமல் தானே சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தீர்கள். என்னை மட்டும் ஏன் நீரை அருந்தச் சொல்கின்றீர்கள்?" என்று கேட்டு அன்று தான் முதன் முதலில் திலீபன் அவரது வார்த்தைகளை மீறியிருந்தான். ஆனால் உலகுக்கே அகிம்சையைப் போதித்தநாடு இந்தியா ஒரு போதும் திலீபனைச் சாகவிடாது என்ற நம்பிக்கையுடன் இந்திய அரசின் முடிவுக்காகத் தேசியத் தலைவரும் காத்திருந்தார்.

எதனையுமே சிந்திக்காது புன்முறுவலுடன் தனது மரணத்தின் மூலம் மக்களின் விடிவுக்கான வழிபிறக்குமானால் அதுவே தான் பெற்ற பாக்கியம் என்று கூறி அந்த இலட்சியத்துடன் உண்ணா நோன்பிருந்து 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க பல்லாயிரக்கணக்கான மக்களின் ஓவென்ற அழுகுரலின் மத்தியில் அவர்கள் கண்முன்னால் திலீபனின் உயிர் பிரிந்தது! தனது சாவின் மூலம் மக்கள் புரட்சி வெடிக்கும் என்று நம்பி தனது போராட்ட வடிவத்தை தான் உயிருக்குயிராக நேசித்த மக்களின் கரங்களில் கையளித்துச் சென்று இன்றுடன் முப்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. ஆனால் இங்கே மக்கள் புரட்சி வெடிக்கவில்லை. மாறாக அந்தத் தியாக தீபத்தின் சாவில் குளிர் காயும் அரசியல்வாதிகளோ அடுத்தடுத்து வரப்போகும் தேர்தலின் வெற்றிகளில் கனவுகண்டு கொண்டிருக்கின்றார்கள்.



இந்தியாவில் இடம்பெற்ற சுதந்திரப்போராட்டத்தில் சுபாஸ் சந்திர போஸ் ஆயுதம் ஏந்திய பேராட்டத்தை ஒருபுறம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது. மறுபுறம் மகாத்மா காந்தி தனது சாத்வீகமான போராட்ட வடிவங்களாக உண்ணா விரதங்கள். அந்நியப்பொருள் பாவனை தடை, கதர் உடைதரிப்பு. உப்பு சத்தியாக்கிரகம் எனப் பல்வேறு வடிவங்களில் அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் பிரித்தானிய அரசாங்கம் திருப்பூர் குமரன், பகத்சிங் போன்ற வீர மறவர்களின் ஆயுதப் போராட்டங்களினால் நிலைகுலைந்த போது, காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை தந்திரமாக நிறுத்தி ஒரு போராட்ட முனையை அடைத்தது. அன்று காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை நிறுத்தியதால், இந்தியாவை விட பிரித்தானியர்கள் இரக்கம் நிறைந்தவர்கள், அகிம்சைக்கு மதிப்பளிப்பவர்கள் என்று தவறாகக் கற்பிதம் கொள்ளக்கூடாது. ஆனாலும் பிரித்தானியர்கள் நினைத்தது போல், உண்ணாவிரதமிருந்து சாகாமலேயே "மகாத்மா" என்ற விருதினைக் காந்தி பெற்று விட்ட நிலையில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்த திலீபனை சாகவிட்ட இந்தியாவையும் அவர்களுடன் இறுதிப் போரில் கைகோர்த்து நின்ற நாடுகளையும் எப்படி அகிம்சையை மதிக்கும் நாடுகள் என்று கூற முடியும்?

ஆனால், உலக விடுதலைப் போராட்டத்தில் ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாயமான யுத்த நடவடிக்கைகளை மட்டுமல்லாது, சாத்வீகமான போராட்டத்தையும் முன்னெடுக்க முடியும் என்று சாதித்துக் காட்டிய விடுதலைப்புலிகளின் ஒரு போர் வாளாகத் திகழ்ந்த லெப்டினன்ட் கேணல் திலீபனின் அந்த வீரச் சாவு ஒருவரலாறாகும். அன்று எங்கள் கண்முன்னாலேயே தனது உடலை அணுஅணுவாக அழித்துக் கொண்டிருந்த திலீபனின் அந்தச்சாவின் செய்தியை இன்றைய சந்ததியினர் புரிந்து கொள்ள வேண்டும்.

"எமது தமிழினம் அடங்காது! அது போராடும்! ஆயுதம் இல்லாவிட்டாலும் அது போராடும். புல்லையும் எடுத்து அது போராடும். அடக்குமுறைக்கு அது வளைந்து கொடுக்காது!. பேரம் பேசாது- விட்டுக் கொடுக்காது. ஆயுதம் இல்லா விட்டாலும் உணவு இல்லா விட்டாலும் இந்த இனம் தலை வணங்காது! அது தொடர்ந்து போராடும். தன்னுடைய விடுதலைக்காக- நியாயத்திற்காக- நீதிக்காக -அது எந்த சக்தியையும் எதிர்த்துப் போராடும்" என்று வெளிப்படுத்திய அந்தச் செய்தியை தமது பதவிகளுக்காகவும் சொகுசு வாகனங்களுக்காகவும் உல்லாச விடுதிகளுக்காகவும் பேரம் பேசும் இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய வேடந்தாங்கி அரசியல்வாதிகளுக்கு எதிராக திலீபன் கூறிய மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும்! அப்பொழுது தான் மக்களுக்காகவே சுகங்களைத் துறந்து மரணித்த மாவீரன் திலீபனின் ஆத்மா சாந்தி அடையும்!



வல்லை.ந.அனந்தராஜ்

# 14 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க வேண்டிய தேவையுள்ளது

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள 43 ஆயிரத்து 720 குடும்பங்களில் 14 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி. கண்டாவளை. பூநகரி. பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 43 ஆயிரத்து 720 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.


இதில் பல்வேறு திட்டங்களினூடாக கூடுதலான குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

எனினும் 14 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-315)




## கருநாட்டுக்கேணி, குமுழமுனை பிரதேசங்களில்

# செவ்வண்டை கட்டுப்படுத்த பயிர்ச்செய்கையாளர்களுக்கு வகுப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கருநாட்டுக்கேணி. குமுழமுனை பிரதேசங்களில் செவ்வண்டை கட்டுப்படுத்துவதற்குரிய பெரமோன் பொறிகள் விநியோகமும் பயிற்சி வகுப்பும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன். பண்ணைத்திட்டமிடல் அதிகாரி ஈ.சற்குணன் மற்றும் கற்பகதரு சங்கத்தினர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கருநாட்டுக்கேணியில் நடைபெற்றகூட்டத்தில்தென்னை செய்கையாளர்கள் உற்சாகமாக இருந்தாலும் காணி உறுதிப்பத்திர பிரச்சினை காரணமாக தென்னை வளர்பிலுள்ள பிரச்சினை சுட்டிக் காட்டப்பட்டது. செவ்வண்டு தாக்கம் அதிகரித்தமையால் இம்மக்களுக்கு வாழ்வாதார பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இப்பிரச்சினை தென்னை பயிர்ச்செய்கை சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு கட்டுப்பாட்டு முறை விளக்கமும் பெரமோன் பொறிகளும் வழங்கப்பட்டன.

செம்மலை பகுதி புளியமுனை கிராம மக்கள் தங்களின் 1000Ac காணிகளில் படிப்படியாக குடியேறும் வேளையில் வெலிஓயா பிரதேசத்தில் இருந்து வரும் யானைத்தாக்கம் கூடுதலாக இருப்பதனால் மின்சார வேலி அமைத்துத் தருமாறு கோரினர். அவ்வாறு மின் சார வேலி அமைக்கும் பட்சத்தில் 320 குடும்பங்கள் தென்னையை வளர்த்து பயன் பெறலாமென சுட்டிக் காட்டப்பட்டது.

குமுழமுனை பிரதேசத்தில் தென்னை பயிரிடக் கூடிய கிட்டத்தட்ட 700AC வனவள திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குமுழமுனையில் இருந்த தென்னைசார் தொழிற்சாலையை மீள புனரமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொண்டனர். தென்னைசார் தொழிற்சாலையை புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை கப்ருக சங்கம் மூலம் படிப்படியாக மேற்கொள்வதாக பிராந்திய முகாமையாளர் கூறினார். (2)

# 3 மில்லியன் ரூபா செலவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள்



(வவுனியா)

வவுனியா வடக்கில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 3 மில்லியன் ரூபா செலவில் பெறுமதியான உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனின் ஏற்பாட்டில் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு 306/B2 இல் அறிமா சங்கத்தின் 3 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு துவிச்சக்கர வண்டி, மாற்றுத்திறனாளிகளுக்கான நாற்சக்கரவண்டி, தையல் இயந்திரம், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், நுளம்பு வலைகள், பயன்தரு மரக்கன்றுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந் நிறுவனத்தினால் இலவச மருத்துவ முகாமும் இடம்பெற்றுள்ளது. பெறுமதியான மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதில் பெருமளவான மக்கள் பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# சுகாதார தொண்டர்களுக்கு பதிலளிக்காது மத்திய சுகாதார அமைச்சர் நழுவல்

## வவுனியாவில் சம்பவம்



வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களுக்கு பதில் அளிக்காது மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன நழுவிய சம்பவம் ஒன்று வவுனியாவில் நடைபெற்றுள்ளது.

வடபகுதியில் பல்வேறு கட்டடங்களை திறந்து வைப்பதற்கு விஜயம் செய்த மத்திய சுகாதார அமைச்சர் நேற்று முன்தினம் மாலை வவுனியாவில் அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை திறந்து வைத்தார்.

இதன்போது. நிரந்தர நியமனம் கோரி தொடர்ச்சியாக போராடிய நிலையில் மத்திய, மாகாண சுகாதார அமைச்சர்களின் வாக்குறுதிகளை நம்பி போராட்டத்தை கைவிட்டிருந்த சுகாதாரத் தொண்டர்கள் தமது நியமனம் தொடர்பில் கேட்டுக் கொள்வதற்கும். மகஜர் ஒன்றினை கையளிப்பதற்கும் முயன்ற போது சுகாதார அமைச்சர் ராஜித அவர்களை சந்திக்காதும். ஊடகங்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்காதும் உடனடியாக வாகனத்தில் ஏறி அங்கிருந்து சென்றுவிட்டார்.

இது தொடர்பில் சுகாதார தொண்டர்கள் தெரிவிக்கையில்.

தாம் தொடர்ச்சியாக நிரந்தர நியமனம் கோரி போராடி வந்த நிலையில் ஒரு மாத காலத்திற்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்திற்கு அமைவாக எமது போராட்டத்தை கைவிட்டிருந்தோம். இன்று மத்திய சுகாதார அமைச்சரிடம் மகஜர் கையளித்து எமது நியமனம் தொடர்பில் கேட்டறிவதற்காக பல மணி நேரமாக காவல் இருந்த போதும் எம்மை சந்திக்காது சுகாதார அமைச்சர் சென்று விட்டார். இதனால் மிகுந்த மனவருத்தத்துடன் நாம் இரவு வேளை வீடு திரும்பினோம் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை. ஊடகவியலாளர்களின் கேள்விக்கும் பதிலளிக்காது அவர் சென்றமை தொடர்பில் ஊடகவியலாளர்களும் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

பிராந்திய சுகாதார வைத்திய சேவைகள் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி சுகாதார அமைச்சர் பைஸர் முஸ்தபா. வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான். வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# அக்கினிச் சிறகுகள் இளைஞர் அமைப்பின் வருடாந்த மாநாடு



அக்கினிச் சிறகுகள் இளைஞர் அமைப்பின் வருடாந்த மாநாடு அக்கினிச் சிறகு அமைப்பின் தலைவர் அரவிந்தன் தலைமையில் நேற்று முன்தினம் காலை வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அமைப்பின் முடிவடைந்த எதிர்காலத் திட்டங்கள். இலக்குகள் என்பன தொடர்பான அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

அரசியல் கைதியாகவுள்ள சிவ.ஆரூரனின் யாவரும் கேளீர், யாழிசை ஆகிய இரு புத்தகங்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. இம்மாநாட்டில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன். வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன். வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன். சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம். சிரேஷ்ட ஊடகவியலாளர் வி.தேவராஜ். தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார். செயலாளர் மாணிக்கம் ஜெகன். எழுத்தாளர் மேழிக்குமரன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# பிரதேசசபையூடாக விநியோகிக்கப்படும் குடிநீர் எமக்கு போதுமானதாக இல்லை

## கோணாவில் கிழக்கு மக்கள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் கிழக்குப்பகுதியில் குடிநீர் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் கிழக்குப்பகுதியில் தற்போதும் குடிநீருக்கான நெருக்கடி காணப்படுகின்றது.

இப்பகுதியின் பிரதேச சபை ஊடாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும். போதிய குடிநீர் கிடைப்பதில்லை எனவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் காணப்படுகின்ற பொதுக்கிணறுகள் மற்றும் ஏனைய கிணறுகளில் நீர் வற்றிக்காணப்படுகின்றன. இதனைவிட இந்தப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட குழாய்க்கிணறுகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.இதனால் இங்குள்ள மக்கள் தமக்கான குடிநீரையும் இதர தேவைகளுக்கான தண்ணீரைப்பெற்றுக் கொள்வதிலும் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக இங்கிருந்து தண்ணீரைப்பெறுவதற்கு மிக நீண்டதூரம் அயல் கிராமங்களுக்குச் செல்லவேண்டியதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே சேதமடைந்த கிணறுகளைப் புனரமைத்துத் தருமாறும் தற்போது வழங்குகின்ற குடிநீரை அதிகரித்துத் தருமாறும் இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மீள் குடியேற்றத்தின் பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் ஏனைய அரச அமைப்புக்களாலும் இந்தப்பிரதேசத்தின் தேவைகள் கருதி அமைக்கப்பட்ட கிணறுகள் அனைத்துமே நீர் இன்றிக்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# 214 நாட்கள் கடந்த நிலையில்
# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் உணவு தவிர்ப்பு வவுனியாவில் ஆரம்பம்





வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 14 பேர் நேற்று உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



வவுனியாவில் கடந்த 214 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது கோரிக்கைகளுக்கு இதுவரை ஆக்கபூர்வமான பதிலேதும் அரசினாலும் தமிழ் தலைமைகளாலும் வழங்கப்படாத நிலையில் சர்வதேசம் தமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் எனக் கோரி இரு நாள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கிருந்து தாம் போராட்டத்தை முன்னெடுத்துவரும் ஏ-9 வீதியின் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இப்போராட்டம் இரண்டு நாட்கள் நடக்கவுள்ளதுடன் அதன் பின்னர் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பில் ஈடுபடுவார்கள். எனினும் குறித்த காலப்பகுதிக்குள் தமக்கான தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் உணவுத் தவிர்பபு போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (2-250)

## இனந்தெரியாத குழுக்கள் அட்டகாசம்; இருவர் காயம்

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் அடையாளம் தெரியாத இளைஞர் குழுக்கள் நேற்று மாலை தொடக்கம் நள்ளிரவு வரை அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குருமன்காடு, வைரவப் புளியங்குளம், புகையிரத வீதி, பூங்கா வீதி, நகரசபை வீதி, குட்சைட் வீதி, தோனிக்கல் போன்ற பகுதிகளில் அடையாளம் தெரியாத இளைஞர் குழுக்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது வீதியில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களிடமிருந்து நகைகள், பணம் என்பவற்றை அபகரிக்க முயன்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவர்களின் தாக்குதலால் காயமடைந்த இருவர் வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் மூன்றுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டபோதும் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)



## பிரதான வீதியைப் புனரமைத்து போக்குவரத்தை சீராக்குங்கள்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் பிரதான வீதியைப்புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி- பூநகரி- மன்னார் ஏ-32 வீதியையும் ஏ-9 வீதி முறிகண்டியை இணைக்கும் வீதியான ஆனைவிழுந்தான் வன்னோரிக்குளம் வீதி இன்று வரை புனரமைக்கப்படாத நிலையில் வன்னேரிக்குளம் ஐயனார் புரம், ஜெயபுரம் ,ஆனைவிழுந்தான், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அன்றாடம் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் நிதியொதுக்கீடுகள் விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்தப்படுவதில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு , ஒப்பந்த காலங்கள் என்பன விளம்பரப்பலகைகளில் காட்சிப்படுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பல்வேறு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்ற ஒப்பந்தக்காரர் மேற்படி விபரங்களை காட்சிப்படுத்தாது கட்டுமான வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு வருகின்ற பேருந்து நிலையத்தின் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இதன் விபரங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை. இதுதொடர்பாக அண்மையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இவற்றுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே உடனடியாக அவற்றைக்காட்சிப் படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆனால்விளம்பரப்பலகை எதுவும் காட்சிப்படுத்தப்படவில்லை இவ்வாறு பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கின்ற போதும் அவற்றின்காட்சிப் படுத்தப்படாமை காரணமாக பல்வேறு மோசடிகள் இடம் பெறுவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (2-315)

## வட்டுவாகல் பகுதியில்
## கடற்படையினர் வசமுள்ள 397 ஏக்கர் காணியை மீட்டுத்தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதிகளில் கடற்படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 397 ஏக்கர் காணி மற்றும் அரச காணிகள் உட்பட 617 ஏக்கர் வரையான காணியை கடந்த2009ஆம்ஆண்டுமுதல் கடற்படையினர் ஆக் கிரமித்து வைத்துள்ளதுடன் குறித்த கட்டுப்பாட்டு பகுதி க்குள் பொதுமக்களுக்கு சொந்தமான கால்நடைகளும் உள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த காணிகளை விடுவிக்குமாறும் கால்நடைகளை மீட்டுத்தருமாறும் அதன் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வந்த போதும் குறித்த காணிகளை கடற்படையினர் தமது தேவைக்கு சுவீகரிக்கும் விதத்தில் இரண்டு தடவைகள் அளவீடு செய்ய முற்பட்ட சமயம் பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

தற்போது கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள சுமார் 617 ஏக்கர் காணிகளும் மிகவும் வளம் நிறைந்த பகுதியாகவும் அதிக வருமானம் தரக்கூடிய கடற்றொழில் பகுதிகளையும் கொண்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதனை விடுவித்துத் தருமாறு அதன் உரிமையாளர்கள் கடந்த ஏழு ஆண்டு காளக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கடற்படையினர் வசமுள்ள 617 ஏக்கர் காணிகளும் இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதியாகக் காணப்படுவதுடன் இப்பகுதிக்குள் பொது மக்களின் பெருமளவான சொத்துக்களும் கைவிடப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான 397 ஏக்கர் காணி தவிர ஏனைய அரச காணிகள், கடற்றொழில், பல்கலைக் கழகம் மற்றும் கடற்றொழில் பயிற்சி நிலையங்கள் என்பன அமையக்கூடிய இடமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## யுத்தத்திற்கு பின்னரான மீள்குடியமர்வை அடுத்து யானைகளின் தொல்லை அதிகம்


முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பகுதியில் அண்மைய நாட்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படு கின்றன என பொது மக்கள், சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின் தங்கிய பகுதியாகக் காணப்படும் மாந்தைகிழக்கு, சிறாட்டிகுளம், பொன்னகர், பனங்காமம், கொம்புவைத்த குளம் ஆகிய பகுதிகளிலும் மூன்றுமுறிப்பு பாலைப்பாணி வடகாடு ஆகிய பகுதிகளிலும் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இவ்வாறு அதிகளவில் யானைகளின் அட்டகாசம் இல்லாத போதும் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வை யடுத்து இந்த யானைகளின் தொல்லை அதிரிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக தென்பகுதியில் வளர்ப்பிற்காக பயன்படுத்தப்பட்ட யானைகள் இவ்வாறு காட்டு பகுதிகளில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளன என்றும் மனிதர்களுடன் பழகிய யானைக்ளாகவே அதிகளவான யானைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு அன்றாடம் காட்டு யானைகளின் தொல்லையால் தங்களது வாழ்வாதாரத்திற்கான தோட்டச் செய்கைகளை கூட மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதுடன் இவ் வாறு யானைகளின் அட்டகாசத்தால் அதிகளவான குடும்பங்கள் இந்தப்பகுதி களில் இருந்து இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். தற்போது நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக காடுகளில் உள்ள ஆறுகள் நீர், நிலைகளில் நீர் வற்றிய நிலையிலும் யானைகள் குடிநீர் தேடி ஊர்மனைகளை அண்டி படையெடுக்கின்றன. என்றும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(2-315)

## இளமருதங்குளம் காட்டில் மரம் வெட்டிய இளைஞன் கைது



வவுனியா இளமருதங்குளம் காட்டுப்பகுதியில் வைத்து இளைஞர் ஒருவரை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதுபற்றித் தெரியவருவதாவது.

வவுனியா சேமமடு, இளமருதங்குளம் காட்டுப்பகுதியில் சட்டத்திற்கு முரணாக மரம் வெட்டப்படுவதாக ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட செல்வா தலைமையில் பொலிஸ் சாஜன் ரனசிங்க, பொலிஸ் கொஸ்தாப புவிசங்கர் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் குறித்த காட்டுப்பகு தியில் வைத்து முள்ளியவளையைச் சேர்ந்த 21 வயது இளைஞரை கைது செய்துள் ளனர். இதன்போது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரியப்பட்ட பாலை .மரங்கள், வெட்டுவதற்கு பயன்படுத்தும் உபகரணம் என்பன கைப்பற்றப் பட்டன.

கைதுசெய்யப்பட்ட இளைஞன் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா ஓமந்தை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (2-250)






சர்வதேச சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு யாழில் நேற்று பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். யாழ்.புகையிரத நிலையம் முன்பாக ஆரம்பமான இந்த ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதியூடாக பண்ணைப் பகுதியை அடைந்தது. அங்கு பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

(படங்கள்:-உ.சாளின்)

# மகிந்த என்ற பூச்சாண்டியைக் காட்டி தமிழர்களை வாய்மூடச் சொல்கிறது அரசு



## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால வரைவு, தமிழ்மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய அரசியல் வேணவாக்களை மிக நாசுக்காக நிராகரித்துள்ளது. மாறாக, நாட்டில் ஏற்கனவே கோலோச்சுகின்ற பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை உறுதி செய்வதாகவே அமைந்திருக்கிறது. தமிழ் மக்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்தால் சிங்கள இனவாதத்தைத் தூண்டி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பலம்பெற்று விடுவார் என்று அரசு தரப்புச் சொல்கிறது. மகிந்த என்ற பூச்சாண்டியைக் காட்டிக் காட்டியே மைத்திரி அரசு தமிழர்களை வாய்மூடச் சொல்கிறது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

மல்லாகம் கல்லாரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துச் சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்துக்கே முதன்மை இடம் வழங்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதை எமது தமிழ்த்தலைவர்களும் ஏற்றுக் கொண்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். இலங்கையின் அரசியல் தலைவிதியை வரலாற்றுக் காலம் தொட்டு பௌத்த மதபீடங்களே தீர்மானித்து வருகின்றன. சிங்களப் பேரினவாதக் கருத்துகளின் ஊற்றுக் கண்களாகவும்இவையே விளங்கி வந்திருக்கின்றன. இந்நிலையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தமிழ்த்தலைமைகள் ஏற்றுக்கொண்டிருப்பது தமிழர்களின் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# ஆண்டுதோறும் 17 ஆயிரம் புற்றுநோயாளர்கள் இனம்காணல்

இலங்கையில் ஆண்டுதோறும் 17 ஆயிரம் புற்றுநோயாளிகள் புதிதாக இனங்காணப்படுவதாகவும் அவற்றில் 15 சதவீதமானோர், மார்பக புற்றுநோயாளிகள் என்று சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு நாளுக்கு 6-7 பேர் வரை மார்பக புற்று நோயாளிகளாக புதிதாக இனங்காணப்படுகின்றனர். 45 முதல் 60 வயது வரையான பெண்களே பெரும்பாலும் மார்பக புற்றுநோயின் பாதிப்புக்கு உள்ளாவதாகவும் இந்தப் பிரிவின் சிறப்பு வைத்தியரான டாக்டர் ஹனா டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

"புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டுவிட்டால் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். பெரும்பாலோர் 3ஆம், 4ஆம் கட்டங்களில் அதிக காலத்துக்கு பிறகு தாமதமாகி வருவதால் குணப்படுத்துவது கடினமாகி விடுகிறது. 5 வருடங்கள் கூட அவர்கள் உயிரோடு இருப்பது கடினம்" என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் அரசு வைத்தியசாலைகளில் 800 புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை மையங்கள் செயற்படுகின்றன. அதன் மூலம் மக்கள் தங்களுக்கு எழுகின்ற சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளலாம் என்று தேசிய புற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

"இலங்கையில் ஆண்டுதோறும் 2 ஆயிரத்து 500 மார்பக புற்றுநோயாளிகள் உட்பட சுமார் 17 ஆயிரம் அனைத்து வகையிலான புற்றுநோயாளிகள் புதிதாக இனங்காணப்படுகின்ற அதே வேளை, 13 ஆயிரம் புற்றுநோயாளிகள் மரணமடைகின்றார்கள்" என்று தேசிய புற்றுநோய் தடுப்புப் பிரிவின் இயக்குநரான டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

"புற்றுநோய் வராமல் ஆரம்பத்திலே தடுப்பு மருந்து மூலம் தடுக்கின்ற வகையிலே, குறிப்பாக பாடசாலைகளில் 6ஆம் வகுப்பு மாணவியருக்கு தடுப்பூசி போடப்படுகின்றது" என்றும் அவர் கூறியுள்ளார்.

"புகையிலை மற்றும்பாக்கு சார்ந்த பொருட்களை பயன்படுத்துவதன் காரணமாக அண்மைக்காலமாக சிறுவர்கள் மத்தியில் அதனால் வரக்கூடிய புற்றுநோய் அதிகரிப்பு காணப்படுகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.


இலங்கையில் ஆண்டுதோறும் ஒரு இலட்சத்து 38 ஆயிரம் மரணங்கள் பதிவாகின்றன. 75 சதவீதமான மரணங்கள் இருதநோய், புற்றுநோய் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட தொற்றாத நோய்களால் ஏற்படும் மரணங்கள் என அறிக்கையிடப்பட்டுள்ளன.

அந்த மரணங்களில் குறிப்பாக 40 சதவீத மரணங்கள் இருதய நோய் காரணமாக நிகழ்கின்றன. புற்றுநோயால் 10 சதவீதத்தினரும் நீரிழிவு நோயால் 7 சதவீதத்தினரும் மரணம் அடைவதாக சமூக வைத்திய நிபுணரான டாக்டர் சுராஜ் பெரேரா தெரிவித்தார்.

ஆண்டுதோறும் அதிகரித்து வரும் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையால் அத்தகைய நோயாளிகளின் இறப்பு எண்ணிக்கையிலும் அதிகரிப்பை காண முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 416 என்று அறிக்கையிடப்பட்ட புற்றுநோயாளிகளின் மரணங்கள் 2005 ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 403 ஆக அதிகரித்ததோடு, 2009ஆம் ஆண்டு தரவுகளின்படி இது 11 ஆயிரத்து 286ஆக கூடியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இ-7)

# மாரடைப்பு ஏற்படாதவாறு காத்துக்கொள்வது எப்படி?




மாரடைப்பு பாதிப்பு ஏற்பட்டால் அதன் விளைவு பயத்தினையே தருகின்றது. இதிலிருந்து மீண்டு வருங்காலத்தில் இவ்வாறு ஏற்படாதவாறு காத்துக் கொள்வதும் மிக மிக முக்கியம் ஆகின்றது.

உங்களுக்கோ, உங்களைச் சார்ந்தவர்களுக்கோ மாரடைப்பு பாதிப்பு ஏற்பட்டால் அதன் விளைவு பயத்தினையே தருகின்றது. இதிலிருந்து மீண்டு வருங்காலத்தில் இவ்வாறு ஏற்படாதவாறு காத்துக் கொள்வதும் மிகமிக முக்கியம் ஆகின்றது.

ஒட்சிசன் நிறைந்த இரத்தம் இருதயத்திற்கு கிடைப்பது தடைப்படும்போது மாரடைப்பு ஏற்படுகின்றது. இதற்கு முக்கியமான காரணமாகப் பார்க்கப்படுவது இருதயத்திற்கு சக்தி தரும் இரத்த குழாய்களில் ஏற்படும் அடைப்புத்தான். இந்த அடைப்பில் கொழுப்பு, கல்சியம் மற்றும் சில பொருட்கள் கலந்து இருக்கலாம்.

பொதுவாக மாரடைப்பு என்றாலே இடது தோள்வலி, நெஞ்சை அழுத்தி பிடிக்கும் உணர்வு, திடீரென பலமின்மை, சில சமயம் நினைவின்மை, மூச்சு வாங்குதல், வியர்த்துக் கொட்டுதல், வெளிர்ந்த சருமம், வயிற்றுப் பிரட்டல், வாந்தி, வலி, கால், கைகளில் வீக்கம் என பல அறிகுறிகளை காட்டி விடும். இன்று மருத்துவ முன்னேற்றத்தின் காரணமாக நன்கு குணம் காண முடிகின்றது. இருப்பினும் அந்தப் பயம் பாதித்தவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் இருந்து கொண்டே இருக்கின்றது. முறையான மருந்தும் குறிப்பிட்ட காலந்தவறாத மருத்துவ பரிசோதனைகளும் இருந்தால் இயல்பான வாழ்க்கை என்பது நிச்சயம் சாத்தியமே.

* ஆனால் வருமுன் காப்பது மிகமிக நல்லது அல்லவா. ஆகவே உங்கள் கொலஸ்ரோல் அளவினை நன்கு கண்காணித்துக் கொள்ளுங்கள். நல்ல கொலஸ்ரோல் குறையவும் கூடாது. கெட்ட கொலஸ்ரோல்கூடவும்கூடாது.

* உங்கள் இரத்த அழுத்தத்தினை அவ்வப்போது பரிசோதித்துக் கொள்ளுங்கள். கெட்டகொழுப்பு உயர் இரத்த அழுத்தத்தினையும் ஏற்படுத்தும் என்பதனை கவனத்தில் கொள்ளுங்கள்.

* கண்டிப்பாய் புகை பிடிப்பதனை நிறுத்துங்கள். இது உயர் இரத்த அழுத்தத்தினை ஏற்படுத்தும். இரத்தக் குழாய் அடைப்புகளை ஏற்படுத்தும்.

* ஊறுகாய், அப்பளம், உப்புச் சேர்ந்த சாதம் இவை வேண்டாமே. பொதுவில் உப்பின் அளவினைக் குறையுங்கள்.

* நிதானமாய் உடற்பயிற்சியினை ஆரம்பித்து நன்கு முடியும் வரை செய்யுங்கள்.

* மன அழுத்தம் இதயத்தினை வெகுவாய் பாதிக்கும்.

# பனம் பழம் கொள்வனவு

## அபிவிருத்திச் சபை அறிவிப்பு

பனம் களி உற்பத்தி செய்யும் நோக்கில் ஒரு பனம் பழம் 5 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் என பனை அபிவிருத்தி சபை அறிவித்துள்ளது. இது தொடர்பில் பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் (விரிவாக்கம்) கே. கோபால கிருஷ்ணன் தெரிவிக்கையில்,

பனம் உற்பத்திகளுக்கு சந்தையில் அதிக கேள்வி உள்ளது. அதிலும் வெளி நாடுகளில் அதிக கேள்வி உள்ளது. ஆனால் அதற்கேற்ற வகையில் உற்பத்திகள் எம்மிடம் இல்லை. அதை செயற்படுத்தும் நோக்கிலும் பனம் பொருள் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வகையிலும் பனம் பழம் மற்றும் பனம் விதை என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளது.

தற்போது பனம் பழம் உவாகும் காலம் என்பதால் தரமான பனம்பழம் எமது சபையால் கொள்வனவு செய்யப்படவுள்ளது. ஒரு பனம் பழம் 5 ரூபாவுக்கும், ஒரு பனம் விதை ஒரு ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

பனம் பழம், பனம் விதை என்பவற்றை சேகரிப்பவர்கள் வலந்தலைச் சந்தி,காரை நகரில் உள்ள காரைநகர் பல்தொகுப்பு நிலையத்திலும், சிங்கநகர் புலோலியில் அமைந்துள்ள பனை உற்பத்தி நிலையத்திலும் கொடுக்க முடியும். அங்கு தரம் பரிசோதிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்படும்.

எனவே பனம் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும், அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-9)

## ஒரே பார்வையில் நவராத்திரி வழிபாட்டு முறைகள்

### எட்டாம் நாள்

| | |
|---|---|
| கோலம்போடும் பொருள் | காசு |
| கோலவகை | பத்ம |
| அபிஷேகத்திற்குரிய திரவியம் | மருதோன்றி |
| திலகம் இடப்படும் திரவியம் | ஸ்ரீசூர்ணம் |
| ராகம் | புன்னாகவராளி |
| இசைக்கப்படும் வாத்தியம் | கும்மி |
| கனிகள் | திராட்சை |
| நிவேதனங்கள் | பாயாசம், முறுக்கு |
| மலர்கள் | ரோஜாப்பூ |
| இலைகள் | பன்னீர் இலை |

தொகுப்பு:- சிவஸ்ரீ . சபா. வாசுதேவக்குருக்கள்
(வீணாகான குருபீடம்)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. ஜோப்பையா ஸ்ரனிஸ்லாஸ்

(அதிபர், யா/வலிதூண்டல் றோ.க.த.க.பாடசாலை)

எமது பாடசாலையின் அதிபராக கடமையாற்றி SLEAS-III பரீட்சையில் சித்தியடைந்து 26.09.2017 இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற விழாவில் ஆரம்பக் கல்வி உதவி கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுக் கொள்ளும் எமது அதிபர் ஜோ. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் மென்மேலும் பதவி உயர்வுகள் பெற்று உயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations!

பாடசாலைச் சமூகம், யா/வலிதூண்டல் றோ.க.த.க. பாடசாலை, வலிதூண்டல்



நடமாடும் மருத்துவ சேவைக்குரிய வாகனக் கொள்வனவுக்காக நிதி சேகரிக்கும் இசை நிகழ்ச்சி

உயிரணிகம்

Bringing the Health care to your community

யாழ் மருத்துவ பீட பழைய மாணவர்கள் (Alumni)

வழங்கும்



பாடகி பிரியங்கா
பாடகர் கௌசிக்
பாடகர் சத்தியபிரகாஷ்

# Super Singers

LIVE IN JAFFNA

அக்டோபர் 14ம் 15ம் திகதிகளில், மாலை 6.30 மணிக்கு

கூவர் அரங்கு, யாழ் மருத்துவபீடம்

ரிக்கட்டுக்களை முட்பதிவு செய்ய: 0776026994

/Uyiraniham/

ஊடக அனுசரணை: DAN வலம்புரி



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:20செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/3461 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, MA/விரிவுரையாளர்எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4596 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BBA, SLAS/அரசதொழில்<br>தொ.இ: B/3467 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 42 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/5063 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28<br>உயரம்: 5'8'<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/3475 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 30 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/5072 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 39செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/விரிவுரையாளர்<br>தொ.இ: B/3479 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26 செவ் 2 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: BA/அரசதொழில்<br>தொ.இ: G/5076 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைபேசித்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாரதம்

# வருமான வரித்துறையினர் திடீர் சோ

## கர்நாடகா முன்னாள் முதலமைச்சர் கிருஷ்ணா மருமகன் வீடுகளில் ரூ.650 கோடி சிக்கியது

(பெங்களூர்)

கர்நாடகா முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாமருமகன்வீடுகளில் 4 நாட்களாக நடந்த வருமான வரித்துறை சோத னையில் சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ரூ.650 கோடி கண்டுபிடிக்கப்பட்டது.

கர்நாடகா முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா. முன்னாள் மத்திய அமைச்சராகவும். ஆளுநராகவும் பணியாற்றி உள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவராக நீண்ட காலமாக இருந்து வந்த எஸ்.எம்.கிருஷ்ணா சமீபத்தில் அதில் இருந்து விலகி பாரதீய ஜனதாவில் சேர்ந்தார்.

எஸ்.எம்.கிருஷ்ணாவின் மருமகன் வி.ஜி.சித்தார்தா. தொழில் அதிபரான இவர் கேப் காபிடே நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார்.

இந்த நிலையில் சித்தார்த்துக்கு சொந்தமான வீடு. ஐ.டி. நிறுவனங்கள் உட்பட. பல நிறுவனங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். சென்னை, பெங்களூர், மும்பை, சிக்மகளூர் உட்பட 25 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. கடந்த 21ஆம்திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை 4 நாட்கள் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையின் போது கணக்கில் வராத சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ரூ.650 கோடி கண்டுபிடிக்கப்பட்டது.

வருமான வரித்துறையின் மக்கள் தொடர்பு அதிகாரி ஒருவர் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார். சோதனை குறித்து தொடர்ந்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (3-8)

## செந்தில் பாலாஜி நண்பர்கள் நி... கணக்கில் வராத இரண்டு கோடி...

முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜியின் நண்பர்களது நிறுவனங்களில், 4 நாட்களாக நடந்த வருமான வரி சோதனை முடி வடைந்தது. இதில் கணக் கில் வராத ரூ.2 கோடி பறி முதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

கரூர் மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, அ.தி.மு.க. (அம்மா) அணியில் டி.டி.வி. தினகரனின் தீவிர ஆதரவாளராக செயற்பட்டு வருகிறார். முதலமைச்சர் பழனிசாமிக்கு எதிராக ஆளுநரிடம் மனு கொடுத்ததில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம். எல்.ஏ.க்களில் செந்தில்பாலாஜியும் ஒருவர் ஆவார்.

அவருடைய நண்பர்கள், உறவினர்கள், ஆதரவாளர்கள் பலர் கரூரில் நிதி நிறுவனம், ஜவுளி நிறுவனம், சாயப்பட்டறைகள் நடத்தி வருகின்றனர். பலர் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகின்றனர். இந் நிறுவனங்கள் மீது வரிஏய்ப்பு புகார் வந்ததன் அடிப்படையில் கடந்த 21 ஆம் திகதி கோவை வருமான வரித்துறை கூடுதல் இயக்குநர் செந்தில்குமார் தலைமையில் சென்னை, திருச்சி, கோவை, சேலம், மதுரை, நெல்லை, கரூர் ஆகிய இடங்களில் இருந்து வந்த வருமான வரி அதிகாரிகள் அதி ரடியாக சோதனைகளை... கொண்டனர்.

இதில் பல நி... ங்களில் பலர் பங்... களாக இருந்தது... வந்தது. இதை... அவர்களுடைய... னங்களிலும் சே... நடத்தினர்.

இச் சோதனை... செந்தில்பாலா... நண்பர்களில்... ரான தாரணி க... னின் நிதி நிறுவ... வரி ஏய்ப்பு புகா... ணமாக, கரூர் ... வுஸ் அருகே ஒரு... மாடி கட்டிடத்தில்... தளத்தில் இயங்... அவரது நிதி நி... அலுவலகத்திற்... மான வரி அதிக... கடந்த 22 ஆம் தி... ளிரவு 'சீல்' வைத்...

இந் நிலையில்... முன்தினம் ர... ஷ்ண புரத்தில்... சாமிநாதன் என்... ஜவுளி நிறுவன...

# ஊழல் வழக்கை சந்திக்க நாடு திரும்பினார் நவாஸ்

(இஸ்லாமாபாத்)

புற்றுநோய்க்காக லண்டனில் சிகிச்சை பெற்று வரும் மனைவிக்கு துணையாக இருந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தனக்கெதிரான ஊழல் வ்ழக்கில் ஆஜராவதற்காக நேற்று இஸ்லாமாபாத் வந்தார்.

செப்டம்பர் 19ஆம் திகதி அன்று நடைபெறும் முதல் விசாரணையின்போது நேரில் ஆஜராகுமாறு நவாஸ் ஷெரிப் மற்றும் அவரது மகன்களான ஹசன் நவாஸ், ஹுசைன் நவாஸ் ஆகியோருக்கு தேசிய பொறுப்புடைமை நீதிமன்ற நீதிபதி முஹம்மது பஷிர் அழைப்பாணை அனுப்பியிருந்தார்.

நவாஸ் ஷெரிப் குடும்பத்துக்கு சொந்தமான 'ஃபிளாக்ஷிப்' நிதி நிறுவனம் தொடர்பாக விசாரிக்க வேண்டியுள்ளதாக அந்த அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது நவாஸ் ஷெரிப் மற்றும் அவரது குடும்பத்தார் யாரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.


நவாஸ் ஷெரிப்பின் அரசியல் ஆலோசகர் ஆசிப் கிர்மானி நீதிமன்றில் ஆஜராகி, புற்றுநோய்க்காக தீவிர சிகிச்சை பெற்றுவரும் தனது மனைவி குல்சூம் ஷெரிப்புக்கு துணையாக நவாஸ் ஷெரிப் மற்றும் அவரது குடும்பத்தினர் லண்டனில் தங்கியுள்ளதால் விசாரணைக்கு அவர்களால் ஆஜராக இயலவில்லை என தெரிவித்தார்.

இக் காரணத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி விசாரணையை வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்நிலையில், புற்றுநோய்க்காக லண்டனில் சிகிச்சை பெற்றுவரும் மனைவிக்கு துணையாக இருந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தனக்கெதிரான ஊழல் வழக்கில் ஆஜராவதற்காக நேற்று இஸ்லாமாபாத் வந்தார்.

நவாஸ் ஷெரிப்பின் வருகை தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்த அவரது மகள் மரியம் ஷெரிப், இந்த வழக்கு நவாஸ் ஷெரிப்புக்கு எதிரானது மட்டுமல்ல, பாகிஸ்தானில் உள்ள 20 கோடி மக்களின் போர். இதை சந்திப்பதற்காக அவர் பாகிஸ்தான் திரும்பியுள்ளார் என குறிப்பிட்டுள்ளார். (3-8)

## டில்லியில் கடன் விவரங்களை காட்டி விவசாயிகள் போராட்டம்



(புதுடெல்லி)

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லி ஜந்தர் மந்தரில் தமிழக விவசாயிகள் 71 ஆவது நாளாக நேற்று முன் தினம் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக விவசாயிகள் டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த போராட்டம் நேற்று முன்தினம் 71 ஆவது நாளை எட்டியது.

இதையொட்டி விவசாயிகள் தங்களது கழுத்தில் அட்டைகளை தொங்கவிட்டு போராட்டம் நடத்தினர். அதில் அவர்கள் வங்கிகளில் பெற்ற கடன் விவரங்களும், நில புலன் உள்ளிட்ட விவரங்களும் எழுதப்பட்டு இருந்தன. மேலும், தங்களது வங்கி கணக்கில் தலா ரூ.15 இலட்சம் செலுத்த வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்துபவர்கள் விவசாயிகள் அல்ல என்று பலர் விமர்சனம் செய்ததாகவும். அவர்களுக்கு தாங்கள் விவசாயிகள்தான் என்பதை தெரியப்படுத்தவே கழுத்தில் அட்டைகளை தொங்க விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (3-8)

# நான்காவது முறை... ஜனாதிபதியாகிறார்...

(பேர்லின்)

ஜேர்மனி நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்கல், நான்காவது முறையாக வெற்றி பெற்று ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படுகிறார்.

ஜேர்மனி நாடாளுமன்றத்தில் மொத்தம் 598 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சி 311 இடங்களில் வெற்றி பெற்று சமூக ஜனநாயக கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்தது. ஏஞ்சலா மெர்கல் தொடர்ந்து மூன்றாவது முறை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த அரசின் பதவிக்காலம் முடிய உள்ள நிலையில், அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான 19 ஆவது நாடாளுமன்ற தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. காலையில் தொடங்கிய வாக்குப்பதிவு மாலையில் நிறைவடைந்தது.

ஜேர்மன் பொதுத்தேர்...



கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் சார்பில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்கலும், சமூக ஜனநாயக கட்சி சார்பில் மார்டின் ஷுல்ஸ்சும் போட்டியிட்டனர். இவர்கள் தவிர இன்னும் ஐந்து பேர் தேர்தல் களத்தில் இருந்தனர்.

வாக்குப்பதிவுக்கு பின்னர் நடத்திய கருத்துக்கணிப்பில் ஏஞ்சலா மெர்கல் மீண்டும் நான்காவது முறையாக ஜனாதிபதியாக பதவி ஏற்பார் என...

இந்நி... யூனியன்... மெர்கல் 3... சாதனை... ந்து, சமூ... வாக்குகள்... பிடித்துள்ள...

இந்த ... கூறுகைய... கிடைக்கு... ஆனாலும்... சந்தோஷ...

# வெளிநாடு

## சாதனை

### ள் நிறுவனங்களில் காடி ரூபா பறிமுதல்

னைகளை மேற் டனர்.

ல் பல நிறுவன பலர் பங்குதாரர் இருந்தது தெரிய . இதையடுத்து ளுடைய நிறுவ லும் சோதனை ர்.

சோதனையில் ல் பாலாஜியின் களில் ஒருவ ாரணி சரவண தி நிறுவனத்தில் ப்பு புகார் கார கரூர் லைட்ஹ நகே ஒரு அடுக்கு டிடத்தில் முதல் இயங்கி வந்த நிதி நிறுவன கத்திற்கு வரு வரி அதிகாரிகள் 2 ஆம் திகதி நள் ல் வைத்தனர். நிலையில் நேற்று னம் ராமகிரு புரத்தில் உள்ள தன் என்பவரது நிறுவன த்தில் வருமான வரி அதிகாரிகள் 4 ஆவது நாளாக சோதனை நடத்தினர். அப் போது அலுவலகக் கணக்குகளை தீவிரமாக ஆராய்ந்தனர். சாமி நாத னிடம் அதி காரிகள் பல கேள்விகளை துருவி துருவி கேட்டனர். ஞாயிற்றுக்கி ழமை விடு முறை தினம் என்பதால் ஊழியர்கள் பணிக்கு வர வில்லை.

நேற்று முன்தினம் மதியம் 1.45 மணி அள வில் சாமிநாதன் நிறுவ னத்தில் வருமானவரித் துறை அதிகா ரிகள் சோத னையைமுடித்துக்கொண்டு வெளியே வந்தனர். அவ ரது நிறுவனத் தில் கைப் பற்றப்பட்ட ஆவ ணங் களை 10 அதிகாரிகள் 3 கார்களில் ஏற்றினர். அப் போது வருமான வரித் துறை அதிகாரிகளி டம் சோதனை குறித்து கேட்டபோது எதுவும் தெரி விக்க மறுத்துவிட்ட னர். (3-8)

## றயாகவும் ார் மெர்கல்

### தேர்தலில் அபாரவெற்றி



றப்பார் எனத் தெரியவந் தது.

இந்நிலையில், கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் சார்பில் போட்டியிட்ட ஏஞ்சலா மெர்கல் 33.2 சதவீதம் வாக்குகள் பெற்று சாதனை வெற்றி பெற்றார். அவரை தொடர்ந்து, சமூக ஜனநாயக கட்சி 20.8 சதவீதம் வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

இந்த வெற்றி குறித்து ஏஞ்சலா மெர்கல் கூறுகையில், இதைவிட அதிக சதவீதம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனாலும், தேர்தலில் வெற்றி பெற்றது மிகுந்த சந்தோஷமே என தெரிவித்துள்ளார. (3-8)

## பிரித்தானியாவின் தலைநகரில் திலீபனின் நினைவு நிகழ்வுகள்



தியாகத தீபம் திலீப னின் 30 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு பிரித்தானியாவின் தலை நகர் லண்டன் எழுச்சி கொண்டுள்ளது. லண்டனில் வர்த்தக நிலையங் கள், ஆலயங்கள், வீடுகள் மற்றும் ஒரு சில தமிழ் பாடசாலை களில் தியாக தீபம் திலீப னின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு, மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத் தப்பட்டுள்ளது.

திலீபனின் தியாகத்திற்கு மதிப்பளித்து அவர் உண்ணா நோன்பிருந்த அந்த புனித நாட்களில் தாமும் பிறருக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் பிரித் தானியா வாழ் தமிழ்மக்கள் இறங்கியுள்ளனர். (8)

## பட்டாசு ஆலையில் பயங்கர தீ விபத்து

### 8 பேர் பலி!



(ராஞ்சி)

ஜார்கண்ட் மாநிலம் குமார் தூபியில் உள்ள பட்டாசு ஆலை யில் நேற்று காலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 8 பேர் உடல் கருகி உயிரிழந்து ள்ளனர்.

ஜார்கண்ட் மாநிலம் குமார் தூபிப் பகுதியில் தனியார் பட் டாசு உற்பத்தி ஆலை செய ற்பட்டு வருகின்றது. நேற்று காலை ஆலையின் வெடிம ருந்து சேமிப்பு கிடங்கு பகுதி யில் திடீரென தீப்பிடித்தது. இந்த தீயானது வேகமாக மற்ற பகுதிகளுக்கும் நொடிப் பொழுதில் பரவியது.

பட்டாசுகள் இருக்கும் பகு தியிலும் தீ பரவியதால் தகவலறிந்து 5 வாகனங் களில் விரைந்து வந்த தீய ணைப்புப் படையினர் தீயை அணைக்க முயற்சித்தனர்.

கட்டுக்கடங்காமல் எரிந்த தீயை கடின முயற்சி எடுத்து தீயணைப்பு வீரர்கள் அணை த்து வருகின்றனர். இந்த விபத்தில் ஆலையில் இருந்த 8 பேர் உடல் கருகி பலியான தாகவும், 25 பேர் காயம டைந்ததாகவும் முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள் ளன. தீ முழுவதுமாக அணைக் கப்பட்டு, இடிபாடுகள் அகற் றப்பட்டால் மட்டுமே பலி எண்ணிக்கை மற்றும் சேத விபரங்கள் துல்லியமாக தெரிய வரும் என பொலிஸார் கூறி யுள்ளனர். தீ விபத்து ஏற் பட்டதற்கான காரணத்தை யும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (3-8)

## அமெரிக்க படையின் தாக்குதலில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் 17 பேர் பலி!

அமெரிக்க படையினர் நடத்திய வான்வெளி தாக்கு தலில் லிபியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகள் 17 பேர் சுட் டுக் கொல்லப்பட்டனர்.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் மட்டுமல்லாது அரபு நாடுகள் பலவற்றிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள் கால்லூ ன்றி இருக்கிறார்கள். அதில் லிபியா நாடும் ஒன்று.

லிபியாவில் 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இரு ந்த மும்மர் கடாபியின் சர் வாதிகார ஆட்சி மக்கள் போராட்டத்தின் மூலம் அக ற்றப்பட்டது. அதை தொடர்ந்து அவரும் கொல்லப்பட்டார்.

அதன்பின்னர் ஏற்பட்ட அரசில் குழப்பம் ஏற்பட்டது. ஐ.எஸ். அமைப்பினர் தங்க ளின் குழுக்களை ஆங்கா ங்கே அமைத்தனர். அவர்க ளுக்கும், அரசு படைகளு க்கும் இடையே அடிக்கடி தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், லிபியா நாட்டில் ஐ.எஸ். தீவிரவா திகள் முகாம் மீது அமெரி க்க படை வான்வழியாக தாக் குதல் நடத்தியது. இதில் அந்த முகாமில் இருந்த 17 தீவிர வாதிகள் சுட்டுக் கொல்லப்பட் டனர் என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். (3-8)

## விமானத்தில் இறக்கை உடைந்து விழுந்து கார் நொறுங்கியது!



(டோக்கியோ)

ஜப்பானில் ஒசாகா நகரம் மீது பறந்து கொண்டிருந்த விமானத்தின் இறக்கை பகுதி 2 ஆயிரம் மீற்றர் உயரத்தில் இருந்து விழுந்த தில் ஒரு கார் நொறுங்கியது.

நெதர்லாந்தை சேர்ந்த கே.எல்.எம். ராயல் ஏர்லை ன்ஸ் நிறுவன விமானம் தலைநகர் ஆம்ஸ் டர்டாமு க்கு சென்று கொண்டிருந் தது. அதில் 300 பேர் பய ணம் செய்தனர்.

அந்த விமானம் ஜப்பா னில் ஒசாகா நகரம் மீது பறந்து கொண்டிருந்தது. அப்போது விமானத்தின் இறக்கை பகுதி உடைந்து விழுந்தது. 4 கிலோ எடை யுள்ள இறக்கை பகுதி 2 ஆயிரம் மீற்றர் உயரத்தில் இருந்து விழுந்தது.

அது ஒசாகாநகரில் வீதியில் சென்று கொண்டி ருந்த ஒரு காரின் மீது 'டமார்' என விழுந்தது. இந்த விபத்தில் காரின் கூரை அப்பளம் போல் நொறுங்கி யது. கண்ணாடிகளும் சிதறின. கார் படுசேதம் அடைந்தது.

இறக்கை உடைந்து சேதம் அடைந்த விமானம் ஆம்ஸ்டர் டாமில் பத்திரமாக தரை இறங்கியது. இந்த சம்பவம் குறித்து விசார ணைக்கு உத்தரவிட்டுள் ளதாக விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. (3-8)

## ஐ.நா.அமைதிப்படை மீது தீவிரவாதிகள் தாக்குதல்

(பமாகோ)

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா அமைதிப்ப டையினர் மீது தீவிரவா திகள் நடத்திய தாக்குதலில் 3 பங்களாதேஷ் அமைதிப் படை வீரர்கள் உயிரிழந்த னர். மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.



மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா சபையின் கீழ் செயற்படும் அமைதிப் படை முகாம்கள் உள்ளன. ஆபிரிக்க நாடுகளில் செயற் படும் தீவிரவாத இயக்கங் களை அழிக்கும் பணியில் இப் படை ஈடுபடுத்தப்பட் டுள்ளது. இந்நிலையில், கடந்த சனிக்கிழமை அந் நாட்டின் வடக்குப்பகுதியில் உள்ள நகரான மாவோ பகு தியில் அமைதிப்படையினர் சென்ற வாகனம் தீவிரவா திகள் வைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கி வெடித்தது.

இத் தாக்குதலில் வாக னத்தில் சென்ற மூன்று பங்களாதேஷ் அமைதிப் படை வீரர்கள் சம்பவ இடத் திலேயே உயிரிழந்தனர். இது தவிர ஐந்து வீரர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக அரு கில் உள்ள வைத்தியசா லைக்கு கொண்டு செல் லப்பட்டனர்.

இத் தாக்குதல் சம்பவ த்தை பங்களாதேஷ் இரா ணுவமும் உறுதி செய்துள் ளது. ஆனால் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் மூன்று பேர் உயிரிழந்து ள்ளதாகவும், நான்கு பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (3-8)

## குர்திஸ்தானில் தனிநாட்டுக்கான வாக்கெடுப்பு

### ஈராக் எதிர்ப்பு, இஸ்ரேல் ஆதரவு

ஈராக்கின் எதிர்ப்புட னும், இஸ்ரேலின் ஆதரவுட னும் குர்திஸ்தான் தனிநாடு பொதுவாக்கெடுப்பு நேற்று நடைபெற்றன.

ஈராக் நாட்டின் வடக்கு பகுதியில் குர்து இன மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் குரதிஸ்தான் எனும் தனிநாடு கோரி, கடந்த 50 வருடங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக, குர்து தொழிலாளர் கட்சியி னர் ஆயுதமேந்திய போராட் டமும் நடத்தி வருகின்றனர்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள ஈராக் பிரத மர் ஹைதர் அல்-பாக்தாதி, ஈராக் பிரிவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று கூறியு ள்ளார். குர்து இன மக்கள் தனிநாடு கோரிக்கையை கைவிட வேண்டும் என்றும், இல்லையென்றால் கடும் விளைவுகளை சந்திக்க நேரி டும் என்றும் அவர் எச்சரி க்கை விடுத்துள்ளார். அத்துடன் இனிமேல் இராணுவ நடவடி க்கையும் எடுக்கப்படும் என் றும் அவர் தெரிவித்துள்ளார். இந் நிலையில் குர்திஸ்தான் தனிநாடு கோரிக்கை மீதான பொது வாக்கெடுப்பு இஸ்ரேல் ஆதர வுடன் நேற்று நடை பெற்று வருகிறது. (3-8)

# பௌத்தர்களுக்கு இருண்ட யுகம்!

## மகிந்த ராஜபக்ஷ கொதிப்பு



(கொழும்பு)

பௌத்தர்கள் இருண்டயுகமொன்றுக்குள் தள்ளப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பௌத்த மதத்துக்கு எந்தவொரு மதிப்பும் இல்லாதுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிக்குகள் குழுவொன்று நிதிசேகரிப்பு நிகழ்வில் ஈடுபட்ட போது அவர்களுக்கு பிரச்சினைப்படுத்தியவர்கள் பௌத்தர்கள் என்பது கவலையளிக்கின்றது.

சில நபர்கள் குறுகிய அரசியல் இலாபம் கருதி பௌத்த மதத்தை பயன்படுத்துவது, அவர்களது அரசியல் தலைவர்களின் பலவீனத்தினாலாகும் என நேற்று முன்தினம் வெல்லவாய பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸில் இணைய தமிழர்கள் தயக்கம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் சேர்ந்து கொள்வதில் தமிழர்கள் நாட்டம் காட்டுவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ்துறையிலுள்ள 7000 வெற்றிடங்களில் 10 வீதத்துக்கு தமிழர்களைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆனால் இதற்கான நேர்முகத் தேர்வுக்கு 180 பேரே வந்திருந்தனர்.

பொலிஸ் வெற்றிடங்கள் அனைத்தும் வடக்கில் இருந்தே நிரப்பப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் பின்னணியில் இருந்து இதனை ஆராய வேண்டும்.

இது தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருடன் கலந்துரையாடியிருக்கிறேன் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியை சந்திக்க எம்.பிக்கள் காத்திருப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தனித்து செயற்படுவது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக பிரதி அமைச்சர் டுலிப் விஜேசேகர உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கவுள்ளனர். சுமார் 20 உறுப்பினர்கள் வரை ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர்.

ஏற்கனவே அருந்திக பெர்னாண்டோ, டி.பி. ஏக்கநாயக்க மற்றும் நிமால் லன்சா ஆகியோர் நாடாளுமன்றத்தில் தனித்து செயற்பட முடிவெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவுடன் இணைந்து இனி ஆட்சியமைக்க வாய்ப்பில்லை

## சந்திரிகா திட்டவட்டம்



(கொழும்பு)

நாட்டை மீட்டெடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஆட்சியமைப்பது தவறில்லை. ஆனால் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஒரு போதும் ஆட்சியமைக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இன்று நாம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்கின்றோம். இந்தப் பாதையை மீண்டும் மோசமான பக்கம் திருப்ப முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### போட்டிகளை சமாளிப்பது எப்படி?

எப்போதுமே ஓட்டப் பந்தயத்தில் தனியாக ஓடினால் சுவாரசியமே இராது. நம் திறமையும் வெளிப்படாது. மாணவராகட்டும், அலுவலகமாகட்டும், தொழிலாகட்டும் ஏன் ஒரு மாதர் சங்கப் பதவியாகக்கூட இருக்கட்டும். சுவையான போட்டி தான் நம்மைத் தீவரமாகச் செயற்படுத்தும் சக்தியாக விளங்கு கிறது.

தன்னிடமிருந்து பிரிந்து போன ஒரு வேலையாள் தனக்கு எதிராக ஒரு கடையைப் போட்டது பற்றி மிகவும் கவலைப்பட்டு இனி என் தொழில் பாதிக்கும் என்று சோர்ந்து பேசினார் ஒருவர். உங்கள் பிசினஸ் இனிமேல் தான் சூடு பிடிக்கப் போகிறது. என்றேன் அவரிடம். இவ்வளவு நாள்வரை தனிக்காட்டு ராஜாவாக இருந்தீர்கள். நடக்கிற தொழில் நடக்கட்டும் என்று இருந்தீர்கள். இனி அப்படி உங்களால் இருக்க முடியாது. போட்டி வந்து விட்டது. இனிமேல் வாடிக்கையாளர்களை நீங்கள் நன்கு கவனிப்பீர்கள். சரக்கை அதிகமாக்குவீர்கள். அதிக நேரம் கடையைத் திறந்து வைத்திருப்பீர்கள். புது வாடிக்கையாளர்களைப்பெறக் களத்தில் இறங்குவீர்கள். இவற்றை உங்கள் வேலையாள் செய்யமாட்டான். அப்படியே செய்தாலும் அவனைவிடக் கூடுதலாக ஒரு படி மேலே போவீர்கள். இது உறுதி. ஆனால் இந்த முக்கியமான திருப்பத்தில் சோர்ந்து மட்டும் போய்விடாதீர்கள். உங்கள் ஆள் முந்திவிடுவான் என்றேன். இன்று "நம்ம பிஸினஸ் கொஞ்சங்கூடப் பாதிக்கலைங்க. சொல்லப்போனா கூடியிருக்கு. ஆனா அவனுக்கும் ஏதோ நடந்துக்கிட்டிருக்கு" என்றார்.

ஒரு நிறுவனத்தில் எக்கவுண்ட்ஸ் பிரிவில் கணக்கு எழுதிக் கொண்டிருந்த ஒருவர் தனக்குப் போட்டியாக இன்னொருவனைச் சேர்த்து விட்டார்கள் என்றும் போகிற போக்கில் தன்னை நீக்கி விடுவார்கள்கள் என்றும் கவலைப்பட்டார். "அப்படியில்லை முன்னிலும் ஈடுபாட்டுடன் வேலையைப் பாருங்கள். உங்களின் அருமையை நிர்வா கத்திற்கு உணர்த்துங்கள். பழைய ஆள் மாதிரி வராதப்பா என்று நிர்வாகிகள் சொல்லும்படி பார்த்துக் கொள்ளுங்கள். மாறாக எப்படி இந்த ஆளைச் சேர்த்தீர்கள் என்று எதிர் நடவடிக்கையில் இறங்கி விடாதீர்கள். இப்படிச் செய்தால் உங்கள் சீட்டுக் கிழிக்கப்படுவது உறுதி" என்றேன்.

நம்மாலெல்லாம் முடியாது என ஓடி ஒளிந்தும் சாக்குப் போக்குத் தேடுவதை நிறுத்திக் கொண்டும் போட்டியிலிருந்து விலகுவதை விட முடிந்தவரை முயன்று பார்க்க வேண்டும்.

இப்போட்டியில் தோற்றாலும், வெரிதும் முயன்றோம் என்கிற திருப்தி இருக்கும். அது மட்டுமல்ல, தோல்வியிலும் சிறிதளவு கௌரவம் மிஞ்சும்.

போட்டி கிளம்பியதும் மற்ற கவனங்களைக் குறைத்துக் கொண்டு, புதிய உத்திகள், வரம்பு மீறாத தந்திரங்கள் ஆகியவற்றைக் கையாண்டு போட்டிகளை அருமையாகச் சமாளிக்க வேண்டும். அதேநினைப்பாக இருக்க வேண்டும்.

நீ 80 ஆவது. நான் 90! நீ 95ஆ? நான் 98! என்று களத்தில் சவாலுடன் இறங்க வேண்டும். நீ80 ஆ? சரிசரி எனக்கு40 போதும் என்றா விட்டுக்கொடுப்பது? வெட்கம்.

உலக சாதனைகள் அனைத்தும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட சாதனைகளை முறியடிக்கும் நோக்கத்துடன் செயலில் இறங்கியவர்களால் சாதிக்கப்பட்டவைதான்.

**லேனா தமிழ்வாணன்**

# புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை; நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும்

4) கீழே தரப்பட்டுள்ள சட்டவாக்கத் தத்துவங்களுக்கு மேலதிகமாக அரசமைப்பினால் அல்லது சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய மேற்பார்வை மற்றும் ஏனைய பணிகளையும் இரண்டாம் சபை பிரயோகித்தல் வேண்டும்.

5) பாராளுமன்றம் மற்றும் இரண்டாம் சபை ஆகிய இரண்டினாலும் விசேட (2/3) பெரும்பான்மைகளுடன் நிறைவேற்றப்பட்டாலன்றி எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தமும் சட்டவாக்கம் செய்யப்படலாகாது.

மக்கள் தீர்ப்பிற்கான தேவைப்பாடு தூண்டப்படின் மக்களால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டாலன்றி திருத்தம் சட்டமாக சட்டவாக்கம் செய்யப்படலாகாது.

6) அதிகாரப் பகிர்வு மற்றும் அடிப்படை உரிமைகள் உள்ளடங்கலாக அரசியலமைப்பு தொடர்பான அடிப்படை அம்சத்தை திருத்தியமைப்பதற்கு நாடி நிற்கும் அரசியலமைப்புத் திருத்தங்கள், மேலதிக அரசியலமைப்பு பாதுகாப்புக்கள், வழிமுறைகள் நீங்கலாக நிறைவேற்றப்பட முடியாது போகலாம்.

## VII. தேர்தல் முறைமை

1. தேர்தல் முறைமை நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதி ஆசனங்களையும் கொண்டுள்ள (இவ்வாறு தொகுதிகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் வகைபொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துதல்) அதேவேளை இறுதி முடிவின் விகிதாசாரத்தை உறுத்திப்படுத்துவதை எதிர்பார்க்கும் (ஆசன ஒதுக்கீடு) ஒரு கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமையாக இருத்தல் வேண்டும்.

2. முதலாவது பாராளுமன்ற சபை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் (உதாரணம் 233)கொண்டுள்ளது.

3.ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஊக்குவிப்பு ஆசனங்கள் நாடளாவிய ரீதியில் அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெறும் கட்சிக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்.

4. கீழே தரப்பட்டவாறு 233 ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. தொகுதிவாரி அடிப்படையில் 140 (60%) அத்துடன் இறுதி முடிவு விகிதாசாரத்தைப் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படும் இழப்பீட்டு ஆசனங்களாக 93 (40 %) இருக்கும்.

5. விகிதாசார பிரதிநிதித்துவ இழப்பீட்டு ஆசனங்கள் மாகாண மற்றும் அல்லது தேசிய மட்டங்களில் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.



6. ஒரு குறித்துரைக்கப்படும் எண்ணிக்கையிலான மேலதிக ஆசனங்கள் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியொன்றிற்கு ஆட்களின் இடம்பெயர்வு காரணமாக ஏற்பட்ட ஏற்றத்தாழ்வை இழப்பீடு செய்வதற்காக வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்.

### 233 ஆசனங்களின் பகிர்ந்தளிப்பு

7. ஒவ்வொரு ஒற்றை உறுப்பினர் தொகுதியினுள்ளும் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளை வெல்லும் வேட்பாளர்களால் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளிலிருந்து தொகுதிவாரி ஆசனங்கள் நிரப்பப்படுகின்றன. குறைந்தளவு பிரதிநிதித்துவத்திற்கு வழிவகுக்காதவாறு சமூகத்தின் அக்கறையை முடிந்தளவிற்கு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும். (சோல்பரி அரசியலமைப்பின் பிரிவு 41 (4), 1972 அரசியலமைப்பின் உறுப்புரை 78 (4) ஆகியவற்றையொத்து)

### மாற்று நிலை:

தொகுதிவாரி ஆசனங்கள் பின்வருமாறு நிரப்பப்படுகின்றன:

I. ஒவ்வொரு ஒற்றை உறுப்பினர் தொகுதியினுள்ளும் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளை வெல்லும் இரண்டு வேட்பாளர்களால் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளால்.

II. ஒவ்வொரு இரட்டை உறுப்பினர் தொகுதியினுள்ளும் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளை வெல்லும் வேட்பாளர்களால் ஒவ்வொன்றும் இரண்டு உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடைய இரட்டை உறுப்பினர் தொகுதிகளால் வாக்காளர்கள் இரண்டு தொகுதிவாரி வாக்குகளுடனும் ஒரு கட்சிக்கான வாக்குடனும் இன்னமும் ஒரே குடவோலையை மாத்திரமே கொண்டிருப்பர்.

III. வேறுவிதத்தில் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படக்கூடிய. பிரதிநிதித்துவக் குழுக்களை இயலச் செய்வதற்காக 5 இரட்டை உறுப்பினர் தொகுதிகளுக்கு மேலதிகமாக இருத்தல் கூடாது.

IV. வேறுவிதத்தில் இரண்டு இரட்டை உறுப்பினர் தொகுதிகளாக இருக்கும் தொகுதிகளை இணைப்பதன் மூலம் இரட்டை உறுப்பினர் தொகுதிகள் உருவாக்கப்படலாம். இவ்வாறாக ஒவ்வொரு வாக்கினதும் பெறுமதியில் நியாயப்படுத்த முடியாத ஏற்றத்தாழ்வு இல்லையென உறுதிப்படுத்தப்படும்.

8.தேசிய மற்றும்/ அல்லது மாகாண இழப்பீட்டு ஆசனங்களின் பகிர்ந்தளிப்பிற்கான வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.

### வாக்களிப்பு

9. ஒவ்வொரு வாக்காளரும் இரண்டும் ஒரு தனித் தாளில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டு வாக்குகளைக் கொண்டிருக்க வேண்டும்.

10. ஒரு வாக்கு ஒற்றை உறுப்பினர் தொகுதிக்காக அல்லது இருத்தல் வேண்டும். அத்துடன் மற்றைய வாக்கு கட்சிக்கானதாக இருத்தல் வேண்டும். (கையாடலுக்கெதிரான விதிகளை அரசியலமைப்பு ஏற்பாடு செய்தல் வேண்டும்.)

11. பாடராளுமன்ற உறுப்பினரொருவர் (அதன்பட்டியலில் அத்தகைய பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட )அரசியல் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழியும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் வெற்றிடமாதல் வேண்டும். அத்துடன்,

(அ) தொகுதியொன்றினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரொருவர் விலக்கப்படும் சந்தர்ப்பத்தில் இடைத் தேர்தலொன்று நடத்தப்படல் வேண்டும்.

(ஆ) தொகுதியொன்றினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரொருவரின் ஆசனம் இறப்பு, பதவி துறப்பு அல்லது தகுதியின்மை என்பவற்றினால் வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் இடைத் தேர்லொன்றைத் தேவைப்படுத்தாது உரிய பட்டியலிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரொருவரைக் கட்சி பெயர் குறித்து நியமிக்கலாம்.

(இ) பட்டியலின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருப்பின் கட்சியானது மாற்றுப் பாராளுமன்ற உறுப்பினரொருவரை அத்தகைய பட்டியிலிருந்து நியமித்தல் வேண்டும்.

(ஈ) மேல் நீதிமன்றம் அரசியலமைப்பு பொருள்கோடல் தொடர்பில் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்டு உறுப்பினரைப் பெயர் குறித்து நியமித்த அரசியல் கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரொருவர் விலக்கப்பட்டதன் செல்லுபடியைத் தீர்மானிப்பதற்கு பிரத்தியேகமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வேறெந்த நீதிமன்றமும் எந்தவொரு நடவடிக்கைகள் மற்றும் நியாயாதிக்கம் அல்லது சட்டத்தன்மையை தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் கூடாதென்பதுடன் எந்தவொரு நீதிமன்றமும் எவ்வித அடிப்படையின் மீதும் அத்தகைய விலக்குதலுக்கு எதிராக உத்தரவொன்றை அல்லது தடுப்பாணையை வழங்கக்கூடாது.

## VIII. ஆட்சித்துறை

1. இன்று காணப்படும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்னும் பொதுவான கருத்தொருமிப்பு காணப்பட்டது.

2. குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளில் மாகாண சபைகளுடன் தொடர்புடையவை உள்ளடங்கலான தத்துவங்கள் ஜனாதிபதிக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

3. ஜனாதிபதி நிலையான பதவிக்காலம் ஒன்றுக்கு பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

### பிரதம அமைச்சரைத் தேர்ந்தெடுத்தல்

4. பிரதம அமைச்சரின் நியமனத்திற்கான செயன்முறை தொடர்பாக பின்வரும் தெரிவுகள் பரிசீலிக்கப்பட்டன.

(அ) பிரதம அமைச்சரின் நேரடித் தேர்வு

(ஆ) பிரதம அமைச்சரின் முன் பெயர் குறித்த நியமனம்

(இ) வெஸ்ட்மினிஸ்டர் முறைமை

5. தேர்தலுக்கு முன்னர் வேட்பாளர் ஒருவரை முன்பெயர் குறித்து நியமிக்கும் முறைமையொன்று வகுத்தமைக்கப்படும் சந்தர்ப்பத்தில்

எந்தவோர் அரசியல் கட்சியும் வேட்பாளர் ஒருவரை பிரதம அமைச்சராகத் தேர்ந்தெடுப்பதற்காக பெயர் குறித்து நியமிக்கலாம்.

ஓர் அரசியல் கட்சி வேறெந்த அரசியல் கட்சி அல்லது குழுவின் நியமித்தவரைப்பெயர் குறித்து நியமிக்கலாம்.

06

ஓர் அரசியல் கட்சி பிரதம அமைச்சருக்கான வேட்பாளர் ஒரு வரை பெயர் குறித்து நியமிக் காது விடலாம்.

6. ஓர் உள்ளூர் தேர்தல் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது விகிதாசாரப் பிரதிநிதித்துவக் கட்சிப் பட்டியலின் கீழ் பாராளுமன்றத்தின் முதலாம் அவைக்குத் தேர்ந்தெடுப்பதற்கு ஓர் அரசியல் கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒவ்வோராளும் அந்த அரசியல் கட்சியினால் பிரதம அமைச்சர் வேட்பாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆளுக்கு தமது ஆதரவை முன்கூட்டியே உறுதிசெய்வதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. ஒரேயொரு உறுப்பினரைக் கொண்ட தேர்தல் தொகுதி ஒன்றில் அல்லது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் சுயேட்சைக் குழுவொன்றின் உறுப்பினர்களாக தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர்களும் பிரதம அமைச்சருக்கான வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவை முன்கூட்டியே உறுதிப்படுத்தலாம்.

8. தேர்தலின் இறுதியிலும் முடிபுகள் பிரகடனத்திலும் பிரதம அமைச்சருக்கான வேட்பாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பெரும்பான்மை ஒன்றின் முன்கூட்டிய உறுதிப்பாடு ஒன்றைப் பெற்றுள்ளாரா? இல்லையாவெனத் தேர்தல்கள் திணைக்களம் தீர்மானிக்கும். பிரதம அமைச்சருக்கான வேட்பாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பெரும்பான்மை ஒன்றின் முன்கூட்டிய உறுதிப்பாடுகளைப் பெற்றிருப்பாராயின் அவ் வேட்பாளர் பிரதம அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகப் பிரகடனப்படுத்தப்படுவார்.

9. எந்தவொரு பிரதம அமைச்சர் வேட்பாளரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து மேற்சொல்லப்பட்ட அடிப்படைகளில் பெரும்பான்மையானதோர் முன்கூட்டிய உறுதிப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளவில்லையென தேர்தல் திணைக்களம் தீர்மானித்தால் பிரதம அமைச்சரைத் தேர்ந்தெடுத்தல் ஒரே அலுவலாக இருக்கும் விசேட பாராளுமன்ற அமர்வொன்றில் பிரதம அமைச்சர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

வெஸ்ட்மினிஸ்டர் முறைமை வகுத்தமைக்கப்பட்டாலும் இம்முறைமை ஏற்புடையதாகும்.

(தொடரும்)

# பொய் வாக்குறுதிகளே மகிந்தவின் தந்திரம்

## "Rajapakse the Sinhala Selfie" நூல் வெளியீட்டில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை

**குசல் பெரேராவினால் எழுதப்பட்ட 'Rajapakse the Sinhala Selfie' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த 12ஆம் திகதி நடந்த இந்நிகழ்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிகழ்த்திய உரையின் மொழியாக்கம் முழுமையாகத் தரப்படுகிறது.**



'Rajapakse the Sinhala Selfie' என இந்த நூல் தலைப்பிடப்பட்டுள்ளது. எங்களை நாங்களே ஒளிப்படம் எடுப்பதே 'சுயபடம்' (செல்பி) எனக் கூறப்படுகிறது. ராஜபக்ஷ தன்னைத் தானே ஒளிப்படம் பிடிக்கும்போது அவரை மக்கள் ராஜபக்ஷ என நோக்காது ஒரு சிங்களவராகவே நோக்குகின்றனர். அதாவது ராஜபக்ஷ எந்த வகையான சிங்கள மனிதர் என்பதை குசல் தனது நூலில் விளக்கியுள்ளார்.

'மகிந்த என்பவர் எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மிக அரிதான விடயங்களையே மறுக்கக் கூடிய ஒரு நண்பர் என்பதை நான் கண்டறிந்தேன். இந்த அடிப்படையில் இவர் தனது சொந்த சௌகரியத்திற்காக எதையும் ஒருபோதும் மறுக்கவில்லை' என குசல் தனது நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

இது மகிந்த ராஜபக்ஷ தொடர்பான பொருத்தமான விளக்கமாகும். மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக எனது தரப்பில் பல அதிருப்திகள் நிலவிய போதிலும், ஒக்டோபர் 07, 2013 அன்று நான் வடமாகாண முதலமைச்சராக மகிந்தவின் முன் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டேன். இவர் மிகவும் நட்பாக இருந்தார். 2014 ஜனவரி 02 அன்று, நான் மகிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தேன். அப்போதும் அவர் மிகவும் அமைதியாகப் பழகினார்.

நான் மகிந்த ராஜபக்ஷவிடம் பத்து வேண்டுகோள்களை முன்வைத்திருந்தேன். அதில் இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய வடக்கின் ஆளுநரைப் பதவி விலக்கி பிறிதொருவரை நியமிக்குமாறு கோரியிருந்தேன். இராணுவ அதிகாரி ஒருவர் வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் இதற்குப் பதிலாக பொதுமகன் ஒருவரை ஆளுநராக நியமிக்குமாறும் நான் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்திருந்தேன். 'நிச்சயமாக நாங்கள் ஆளுநரை மாற்ற வேண்டும். ஆனால் இவ்வாண்டு ஜுலை மாதம் வரை எனக்கு அவகாசம் கொடுங்கள். ஏனெனில் அவருக்கான பதவிக் காலம் ஜுலையிலேயே முடிவடைகிறது. இதன் பின்னர் நான் பொதுமகன் ஒருவரை ஆளுநராக நியமிக்கிறேன்' என மகிந்த ராஜபக்ஷ எனக்குப் பதிலளித்திருந்தார்.

இந்த அடிப்படையில் வடக்கின் ஆளுநராக நியமிப்பதற்குப் பொருத்தமானவர்களின் பெயர் விபரங்களையும் மகிந்த ராஜபக்ஷ என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சில பெயர்களை அவரிடம் குறிப்பிட்டிருந்தேன்.

ஜுலை மாதம் வந்தபோது மகிந்த ராஜபக்ஷ எனக்குத் தந்த வாக்குறுதிகளையும் மறந்து மீண்டும் குறித்த இராணுவ ஆளுநரின் பதவிக்காலத்தை மேலும் நீட்டித்தார். மகிந்தவின் இந்தச் செயல் மூலம் அவரிடம் முன்வைத்த பத்துக் கோரிக்கைகளும் ஒருபோதும் நிறைவேற்றப்படமாட்டாது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

மகிந்த ராஜபக்ஷவின் இந்தச் செயற்பாடே சிங்கள செல்பியாகக் காணப்படுகிறது. தன்னிடம் பிறிதொரு எண்ணம் உள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். பொய்யான வாக்குறுதிகள் என்பது மகிந்த ராஜபக்ஷவின் தந்திரமாகக் காணப்படுகிறது.

குசல் தனது அணிந்துரையில் பிறிதொரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட்டுள்ளார். 'பயங்கரவாதம்' என்கின்ற பதத்தின் அரசியல், உட்குறிப்புக்களை புலம் பெயர் தமிழ் மக்கள் சரியாக வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் தவறியுள்ளனர் என குசல் குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெற்ற செப்டெம்பர் 11 தாக்குதலானது உலக அரசியலில் தீவிரமானதொரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது அமெரிக்கா மீது அல்குவைதாவால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் பின்னர் அமெரிக்கப் புலனாய்வாளர்கள், அரச அதிகாரிகள் போன்றோரால் உலகெங்கும் செயற்பட்ட ஆயுத அரசியலானது பயங்கரவாதம் என முத்திரை குத்தப்பட்டது. இதன் பிரகாரம் அல்குவைதாவிற்குச் சமமானவர்களாக தமிழ் ஆயுதக்குழுவினரையும் ராஜபக்ஷ அங்கீகாரம் செய்து அவர்களைப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியிருந்தார். செப்டெம்பர் 11 தாக்குதல் இடம்பெற்று 16 ஆண்டுகள் கடந்து விட்டன.

இப்போதும் கூட தமிழ் ஆயுதக் குழுக்களை பல ஊடகங்கள் பயங்கரவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் குறிப்பிடுகின்றன. உலக அரங்கில் தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பயங்கரவாதச் செயற்பாடுகளாக முத்திரை குத்தப் படுகின்றன. இந்த அளவிற்கு மகிந்த ராஜபக்ஷ உள்ளூர் அரசியல் இராணுவப் போராட்டத்தை உலகளாவிய நிகழ்வாக மாற்றியுள்ளார்.

சிங்கள செல்பியாக உள்ள மகிந்தவைப் பற்றியே குசலின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக வெளியிடப்படும் நூலிற்கு ஏன் விக்னேஸ்வரன் ஆதரவு வழங்குகின்றார் என்கின்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 'சம்பந்தன் மகிந்தவுடன் நட்புறவைப் பேணுகிறார்- இதற்கு விக்னேஸ்வரன் பூக்களை வழங்குகிறாரா?' போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நான் எனது நண்பரான குசல் பெரேரா தனது நூல் வெளியீடு தொடர்பாக வழங்கிய அழைப்பிதழை ஏற்றே நான் இங்கு வந்துள்ளேன். இதன்பின்னரே இந்த நூல் எதைப் பற்றியது என்பது தொடர்பாக நான் அறிய முற்பட்டேன். இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பந்தியை நான் இங்கு முன்வைக்க விரும்புகிறேன்.

'ராஜபக்ஷ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தால் ஏற்பட்ட கொடிய விளைவுகளை ஒருபோதும் முக்கியத்துவப்படுத்தவோ அல்லது நியாயப்படுத்தவோ முடியாது. இந்த யுத்தத்தின் தாக்கமானது வடக்கு-கிழக்குடன் மட்டும் முடியவில்லை. இந்த யுத்தம் தமிழ் மக்களை மட்டும் வேட்டையாடவில்லை. தமிழ் மக்கள் இந்த யுத்தத்தின் போது மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையே.

அத்துடன் நீண்ட காலமாக நடைமுறையிலுள்ள அனைத்து சமூகத்தவர்களினதும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள், சமூக விழுமியங்கள் போன்றன மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட கொடிய யுத்தத்தால் அழிவுற்றுள்ளன. இந்த யுத்தமானது மக்களின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகளை முற்றிலும் மீறியுள்ளது. இந்த யுத்தமானது ஊடக சுதந்திரத்தை பாதிப்படையச் செய்துள்ளது. அத்துடன் அரசியல் இராணுவ ஆட்சி ஒன்று இலங்கையில் இடம்பெறுவதற்கும் இக் கொடிய யுத்தம் வழிவகுத்தது.

இதன்மூலம் நீண்டகாலமாக தேர்தல் மூலம் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் செயலிழந்தது. இதனால் இராணுவ ஆட்சியானது மக்களுக்குப் பொறுப்புக்கூறத் தவறியது. இந்த யுத்தம் மக்களின் இறையாண்மையை நிர்மூலமாக்கியது. இது மக்களை சமூக உளவியல் தாக்கத்திற்கு உள்ளாக்கியது. தமிழ் 'பயங்கர வாதம்' என்கின்ற பதத்தை இல்லாதொழிப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட கொடிய யுத்தமானது இத்தகைய பல்வேறு அழிவுகளை ஏற்படுத்தியது' என குசல் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை எவராலும் மறுக்க முடியாது. தமிழ்ப் பயங்கரவாதத்தை அழித்தல் என்கின்ற போர்வையில் மகிந்த ராஜபக்ஷ அரசியல் இராணுவ ஆட்சிக்கு வழிவகுத்தார். மகிந்த அரசியல் ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதேவேளையில் இவர் இராணுவ ஆட்சியை மேற்கொண்டமை மக்களின் இறையாண்மையைப் பாதித்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மகிந்தவைக் கவருவதற்காக சம்பந்தனுக்குப் பூக்களை வழங்குவதற்கு அப்பால், பொருத்தமான நேரத்தில் தேவைப்படும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக நான் என்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறேன். அதாவது வில்லன்கள், கதா நாயகர்களை விட மிக விரைவாகப் பிரபலமடைகின்றனர் எனக் கூறப்படுகிறது. ஆனால் இதைப் பிரபலம் எனக் கருதமுடியாது. இது அவப்பெயரைச் சம்பாதித்துத் தருகிறது.

இந்த வகையிலேயே இன்று விற்பனை செய்யப்படும் குசால் பெரேராவின் நூலும் மகிந்தவிற்கு அவப்பெயரையே சம்பாதித்துத் தரும். மாறாக இது மகிந்தவிற்கு நற்பெயரைச் சம்பாதித்துக் கொடுக்காது. இருப்பினும் நான் இரா.சம்பந்தனைப் போன்று நடந்து கொள்ளவில்லை.

குசல் எழுதிய நூலில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக எழுதிய விடயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(தொடரும்....)

# பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு இந்து மதமே அடிப்படை

## அமைச்சர் விஜிதமுனி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்து பௌத்த மதத்தை காப்போம் அதுபோன்று ஏனைய மதங்களுக்கான பாதுகாப்பும் மதங்களைப் போதிப்பதற்கான உத்தரவாதமும் வழங்கப்படும் என்று நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

மத்திய நீர்ப்பாசனத்திணைக்களத்தின் 650 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்படவுள்ள கிரான் புல்சேனை அணைக்கட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்குமாக எங்களுடைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய அரசியல் யாப்புச் சட்டத்தை உருவாக்கவுள்ளார்.

அரசியல் யாப்புச் சட்டம் கொண்டுவருவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோருக்கும் பங்களிப்பு உள்ளது. இவர்கள் மூவரும் இருக்கும் போது நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும்.

கௌதம புத்தர் இந்தியாவிலிருந்து பௌத்த மதத்தை கொண்டுவந்தார். கதிர்காமக் கந்தன் இந்தியாவிலிருந்து வந்தார். கணபதி, முருகன், உட்பட அனைத்து தெய்வங்களையும் சிங்களவர்களும் தமிழர்களும் வணங்குகின்றோம்.

பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமே இந்து மதமாகும். 1918ஆம் ஆண்டு வெல்லஸ பகுதியில் வெள்ளையருடன் யுத்தம் நடைபெற்ற போது அவர்களுக்கு பயந்து சிங்கள மக்கள் கிழக்கு மாகாணத்தில் தஞ்சம் புகுந்தனர். பாதுகாப்புக்காக எங்களுடைய சிங்கள மக்கள் தமிழ் முஸ்லிம் பெயர்களை இணைத்துக் கொண்டனர்.

நாட்டில் சகல மக்களும் கலந்து வாழ வேண்டும். அனைவரும் அனைத்துப் பண்டிகைகளையும் கொண்டாட வேண்டும். நாட்டில் உள்ள மக்களின் பல தரப்பட்ட கலாசாரங்களினால் தனித்துவம் பேணப்படுகிறது.

இங்குள்ள தமிழர்கள் போன்று மலையகத்தில் உள்ள தமிழர்கள் இந்தியாவிலிருந்து வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பபை செய்கிறார்கள்.

முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு வரும்போது மனைவிகளை அழைத்து வரவில்லை. அவர்கள் இங்கிருந்த சிங்கள மற்றும் தமிழ்ப் பெண்களை மணந்து கொண்டனர்.

கிரான்புல் சேனை திட்டத்திற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை அனைத்து விவசாயிகளும் இதனால் பயனடைய வேண்டும். இந்த மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தவர்கள். மக்களுக்கு சேவை செய்வதன் ஊடாக நல்லிணக்கத்தைக் கொண்டுவரவேண்டும் என ஜனாதிபதி விரும்புகிறார் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நான் சிறுவனாக இருக்கும் போது முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் மட்டக்களப்பிற்கு வரும்போது 122 தோரணங்கள் அமைத்து அவர்களை வரவேற்றனர்.

1989ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது ஜே.வி.பிக்கு ஒளிந்து இருக்கும் போது தற்போது மாகாணசபை உறுப்பினராக இருக்கின்ற கோவிந்தன் கருணாகரம், மாவை சேனாதிராசா. ஜோசப் பரராஜசிங்கம் போன்றோர் பாராளுமன்ற உறுப்பினராக எங்களுடன் இருந்தார்கள்.

பயங்கரவாத யுத்தத்திலிருந்து தப்பி நாங்கள் உயிருடன் இருக்கின்றோம். என்னுடன் இருந்த பலர் உயிருடன் இல்லை 30வருட யுத்தத்தில் என்ன நடந்தது. ஏன் நாங்கள் சண்டையிட்டோம்.

தற்போது நாடு ஒரு சமாதான சூழ்நிலையில் உள்ளது. தற்போது நாட்டின் சகல பகுதிகளிலும் சுதந்திரமாக செல்லக்கூடிய சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் சுட்டிகாட்டினார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1201

Search for people, places and things — Nagendram Home

### சுகன்யா




சந்தோசம் வந்தா
சீக்கிரம்
அனுபவிச்சிடனும்.
கஷ்டம் வந்தா
சீக்கிரம் அனுப்பி
வைச்சிடனும்.

### கஸ்தூரி




### சங்கீதா




### திவ்யன்

தனக்கு கிடைக்காதது
யாருக்கும் கிடைக்கக்கூடாது
என்று சிந்திக்கிறவன்
சமூக விரோதியாகிறான்...!

தனக்கு கிடைக்காதது
மற்றவர்களுக்காவது கிடைக்கட்டும்
என்று கருதுபவன்
சமூக சீர்திருத்தவாதியாகிறான்..!

### சுகர்ணன்

உனக்குத்
தேவையான
எல்லா
வலிமையும்,
உதவியும்
உனக்குள்ளேயே
உள்ளன



### தேவனா

ஆசிரியர்: பூமி தன்னைத்தானே
சுத்தி சூரியனைச் சுத்துமா?
இல்ல சூரியன் தன்னைத்
தானே சுத்தி
பூமியைச் சுத்துமா?

மாணவன்: எனக்குத் தலையைச்
சுத்துது சார்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## கமலின் நம்பிக்கை



நடிகை சுஜா வருணியின் தந்தை அவரை விட்டு சென்றதை பற்றி பலமுறை சோகமாக பேசியுள்ளார். இன்னும் மூன்று மாதங்களில் அவர் திரும்ப வரவில்லை என்றால் நான் வருகிறேன் என கமல் அவருக்கு ஒருமுறை ஆறுதல் கூறினார்:

இதுப்பற்றி கமலிடம் பேசிய சுஜா " என் வீட்டுக்கு வருகிறேன் என கூறினீர்கள். என் திருமணத்தை நீங்கள் தான் நடத்தி வைக்க வேண்டும்" என கேட்டுக்கொண்டார்.


அதற்கு கண்டிப்பாக அதைச் செய்வேன் என கமல் பதிலளிக்க சுஜா உருகிவிட்டார்.

## ஓவியாவுக்காய் கூடிய ரசிகர் பட்டாளம்

சரவணா ஸ்ரோர்ஸ் புதுக் கடை திறப்பு விழாவுக்கு பிக் போஸ் புகழ் ஓவியா பிரதம விருந்தினராக வருகைதர அவரின் ரசிகர்கள் கூடி ஆர்ப் பரித்தனர். இதனால் ஓவிய எல்லையற்ற மகிழ்வடை வதாக செய் தியாளர்களிடம் தெரிவித்தார்.



## பட்டம் வென்ற பாலாஜி



பிக்போஸ் நிகழ்ச்சி இந்தியாவில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஹிந்தியில் 10 சீசனாக சக்கை போடு போட்ட இந்நிகழ்ச்சியை தமிழில் கமல் தொகுத்து வழங்கி வருகிறார்.

இதையடுத்து தெலுங்கில் 1 மாதம் கழித்து தொடங்கப்பட்டது. ஜூனியர் என்.டி.ஆர் தொகுத்து வழங்கிய இந்த நிகழ்ச்சியின் இந்த இறுதிச்சுற்றில் பிரபல நடிகர் சிவ பாலாஜி வெற்றி பெற்று ரூ. 50 இலட்சத்தை கைப்பற்றினார். இவர் நடிகை மதுமிதாவின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இருவரும் இங்கிலீஷ்காரன் படத்தில் ஜோடியாக நடித்திருந்தனர்.

## அப்படி நடிக்கமாட்டேன்

ஓவியா மக்களின் அபிமான நடிகையாகிவிட்டார் என்பதை விட மக்கள் மனதில் இடம்பெற்ற சக மனுஷி என்று சொன்னால் சரியாக பொருந்தும். காரணம் அவர் பிக்போஸ் வீட்டில் நடிக்கவில்லை.

கடந்த 2012இல் விமல், ஓவியா, அஞ்சலி, சிவா நடித்த கலகலப்பு படம் வெளியானது. தற்போது இதன் 2ஆம் பாகத்தை எடுக்கிறாராம் சுந்தர்.சி. அதே ஹீரோ இப்படத்தில் இருந்தாலும் ஓவியா நடிக்க வில்லையாம். இது அவரது ரசிகர்களுக்கு வருத்தத்தை தந்தாலும், சொல்லப்போகும் விடயத்தை பார்த்தால் சந்தோசப்படுவீர்கள். ஆம். கலகலப்பு 2 இல் கவர்ச்சியாக நடிக்க சொன்னார்களாம்.

ஆனால் ஓவியா, பிக்போஸ் மூலம் ரசிகர்கள், மக்கள் என அனைவரும் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அதனால் கவர்ச்சியாக நடிப்பது வேண்டாம் என இப் படத்தை தவிர்த்துவிட்டாராம்.

## வீட்டுக்குச் செல்ல மாட்டேன்



நடிகை சுஜா பிக்போஸ் வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார். வெளியில் வந்த அவரிடம் வீட்டில் சென்று அனைவரையும் எப்படி எதிர்கொள்வீர்கள் என கேட்டார்.

"நான் இப்போதைக்கு வீட்டுக்கு செல்ல மாட்டேன், 100 நாட்கள் முடியும் வரை வேறு எங்காவது தங்கியிருப்பேன்" என கூறினார்.

அதற்கு கமல், "தோல்வியை தைரியமாக கொண்டு செல்ல வேண்டியது அன்பானவர்கள் தான்" என கூறினார்.

## காமடியனான கணேஸ்



தமிழில் மிகவும் பிரம்மாண்டமாக தொடங்கப்பட்ட BiggBoss நிகழ்ச்சி 100 ஆவது நாளை நெருங்கி வருகிறது. ஆரம்பத்தில் இருந்து நிகழ்ச்சிக்கு ரசிகர்களிடம் ஏகோபித்த வரவேற்பு கிடைத்து வருகிறது.

இந்த முதல் சீசனில் யார் ஜெயிப்பார்கள் என்பதை தெரிந்து கொள்ள மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர்.

இந்த நிலையில் ஹரிஷ், ஆரவ், பிந்து மூவரும் கணேஷ் செய்த சில விஷயங்களை பேசி சிரித்துக் கொண்டு இருக்கின்றனர்.

கணேஸ் நெற்றியில் பிஸ்கட்டை வைத்துவிட்டு அதை கைகளால் தொடாமல் தலையை அசைத்து பிஸ்கற்றை வாயால் உண்ண வேண்டும்.

இதில் கணேஸ் பிஸ்கற்றுடன் பட்டபாட்டை பார்த்துத் தான் அவர்கள் அப்படிச் சிரித்துக் கொண்டார்கள்.

# வடமாகாணத்தின் உள்ளூராட்சிக் கட்டமைப்பு-2017

நீண்டகால தர்மதம் மற்றும் வாதப்பிரதிவாதங்களின் பின்னர் உள்ளூராட்சி சபைகளுக்கு கலப்பு முறை தேர்தல் மூலம் அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் முறைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. வட்டார முறையில் கூடிய வாக்குப் பெற்றவர்கள் 60 வீதமாகவும் கட்சி பெற்ற வாக்கு அடிப்படையில் 40 வீதமாகவும் இருக்கும். மேலும் ஒரு சபைத் தேர்தலில் ஒவ்வொரு கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்ற வாக்குகளுக்கு ஏற்ப சபையின் அங்கத்தவர்கள் பகிரப்படுவர். மேலும் ஒவ்வொரு சபையிலும் மொத்த அங்கத்தவர்களில் பெண்கள் 25 வீதத்திற்கு குறையாது இருக்க வேண்டுமென்பது சட்டமாகும்.

வடமாகாண மக்கள் அதிகாரப்பரவல் வேண்டி உள்ளக சுயாட்சியை அனுபவிக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாக போராடிக்கொண்டிருக்கின்றனர். இலங்கையில் மூன்று அடுக்கு ஜனநாயகக் கட்டமைப்புள்ளது. முதலாவது நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றமும் இரண்டாவது நிலையில் மாகாண சபைகளும் மூன்றாவது நிலையில் உள்ளூராட்சிச் சபைகளும் இருக்கின்றன. உள்ளூராட்சிச் சபைகள் மக்களின் வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படும் சபைகளாகும். மூன்றாம் நிலையிலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் திறம்பட இயங்கினால் மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். வீதிகள் பராமரிப்பு, சந்தைகள், திண்மக் கழிவு அகற்றல், தெரு விளக்கு, சுகாதார மேம்பாடு, பொழுதுபோக்கு வசதிகள், குடிநீர் விநியோகம், நூலக வசதி, முன்பள்ளிகள் மற்றும் பல்வேறு சமூக நலச் சேவைகளை உள்ளூராட்சிச் சபைகள் செய்து கொடுக்கலாம். வடமாகாண மக்கள் தங்களுடைய மாகாண சபையையும் உள்ளூராட்சிச் சபைகளையும் திறம்பட நிர்வகித்தால் இம் மாகாண மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

வடமாகாணத்தில் இன்று 34 உள்ளூராட்சிச் சபைகள் இருக்கின்றன. ஒரு மாநகர சபையும் (யாழ்ப்பாணம்), ஐந்து நகர சபைகளும் (பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, வவுனியா, மன்னார்) மற்றும் 28 பிரதேச சபைகளும் இருக்கின்றன. இந்த 34 சபைகளுள் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராகவும், முசலிப் பிரதேச சபையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும் இருக்கின்றனர். ஏனைய 32 உள்ளூராட்சி சபைகளில் தமிழர் பெரும்பான்மையாக இருக்கின்றனர். செட்டிகுளம், மன்னார், மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் முஸ்லிம்கள் காத்திரமான சிறுபான்மையினமாக இருக்கின்றனர். சிங்களவர் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கு வெளியில் வவுனியா வடக்குப் பிரதேச சபையிலும், கரைதுறைப்பற்று பிரதேச சபையிலும் குறிப்பிடத்தக்க அங்கத்தவர்களைப் பெறுவர். மேலும் இவ்விரண்டு பிரதேச சபைகளின் தெற்குப் பகுதிகளில் சிங்களவர் செறிவாக வாழ்கின்றனர்.

இக்குடியிருப்புக்கள் 1985 இற்கு பின்னர் ஏற்பட்டவையாகும். மேலும் வவுனியா நகர சபையில் முஸ்லிம்களும் சிங்களவரும் இடம்பெறும் வாய்ப்புண்டு.

வடமாகாணத்தில் இருக்கும் உள்ளூராட்சி சபைகளும் வட்டார அடிப்படையிலும் விகிதாசார ரீதியிலும் மற்றும் மொத்தமாக இச் சபைகள் பெறும் அங்கத்தவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு.

| உள்ளூராட்சி சபை | குடித்தொகை 2012 ✦ | வட்டாரரீதியில் அங். எண் | விகிதாசார ரீதியில் அங். எண் ✦✦ | மொ. அங்கத்தவர் எண்ணிக்கை | பெண்கள் எண் ✦✦ | ஒருஅங்கத்தவரின் சராசரி குடி.தொகை |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாண மாநகரசபை | 78808 | 27 | 18 | 45 | 11 | 1751 |
| பருத்தித்துறை நகரசபை | 13048 | 09 | 06 | 15 | 03 | 869 |
| வல்வெட்டித்துறை நகரசபை | 9564 | 09 | 06 | 15 | 03 | 637 |
| சாவகச்சேரி நகரசபை | 16209 | 11 | 06 | 17 | 04 | 953 |
| நெடுந்தீவு பிரதேச சபை | 3824 | 8 | 04 | 12 | 03 | 318 |
| வேலணைப் பிரதேச சபை | 16742 | 12 | 08 | 20 | 05 | 837 |
| ஊர்காவற்றுறை பிரதேச சபை | 9876 | 08 | 04 | 12 | 03 | 823 |
| காரைநகர் பிரதேச சபை | 9576 | 06 | 04 | 10 | 02 | 957 |
| வலிகாமம் மேற்கு பிரதேசசபை | 46438 | 15 | 10 | 25 | 06 | 1857 |
| வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை | 52269 | 17 | 10 | 27 | 06 | 1935 |
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | 29518 | 21 | 14 | 35 | 08 | 843 |
| வலிகாமம் தெற்கு பிரதேசசபை | 53016 | 22 | 14 | 36 | 09 | 1472 |
| வலிகாமம் கிழக்கு பிரதேசசபை | 73225 | 22 | 14 | 36 | 07 | 2034 |
| வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை | 43730 | 19 | 12 | 31 | 05 | 1410 |
| பருத்தித்துறை பிரதேச சபை | 37719 | 12 | 08 | 20 | 05 | 1885 |
| சாவகச்சேரி பிரதேசசபை | 48495 | 18 | 12 | 30 | 07 | 1616 |
| நல்லூர் பிரதேச சபை | 39725 | 12 | 08 | 20 | 05 | 1986 |
| பச்சிலைப்பள்ளி பிரதேச சபை | 8530 | 8 | 4 | 12 | 03 | 710 |
| கண்டாவளை/கரைச்சிப் பிரதேச சபை | 84678 | 21 | 14 | 35 | 08 | 2419 |
| பூநகரி பிரதேச சபை | 20302 | 11 | 06 | 17 | 04 | 1194 |
| மன்னார் நகரசபை | 24417 | 9 | 06 | 15 | 03 | 1628 |
| மன்னார் பிரதேச சபை | 26661 | 12 | 08 | 20 | 05 | 1333 |
| நானாட்டான் பிரதேச சபை | 20471 | 10 | 06 | 16 | 04 | 1037 |
| முசலி பிரதேச சபை | 8119 | 10 | 06 | 16 | 04 | 507 |
| மாந்தை மேற்கு பிரதேச சபை | 17264 | 13 | 08 | 21 | 05 | 822 |
| வவுனியா நகரசபை | 42000 | 12 | 08 | 20 | 05 | 2100 |
| வவுனியா வடக்கு பிரதேச சபை | 15318 | 14 | 08 | 20 | 05 | 766 |
| வெங்கலச் செட்டிக்குளம் | 29886 | 10 | 06 | 16 | 04 | 1867 |
| வவுனியா தெற்குப் பிரதேச சபை | 75535 | 16 | 10 | 26 | 06 | 2905 |
| வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை | 13118 | 10 | 06 | 16 | 04 | 820 |
| மாந்தை கிழக்கு பிரதேச சபை | 7117 | 08 | 04 | 12 | 03 | 593 |
| துணுக்காய் பிரதேச சபை | 9699 | 08 | 04 | 12 | 03 | 808 |
| புதுக்குடியிருப்புப் பிரதேச சபை | 23824 | 12 | 08 | 20 | 05 | 1191 |
| கரைதுறைப்பற்று பிரதேச சபை | 32037 | 13 | 08 | 21 | 05 | 1525 |

✦ சபைகளின் இன்றைய குடித்தொகை பெருமளவிற்கு வேறுபட்டிருக்கலாம்.


✦✦ முழுத்தானத்திற்கு மாத்திரமே அங்கத்தவர் ஒதுக்கப்பட்டது.

வடமாகாணத்திலுள்ள எல்லா உள்ளூராட்சி சபைகளில் மொத்தமாக 724 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றார்கள். இத் தொகையில் 441 வட்டார ரீதியிலும் 284 பேர் விகிதாசார ரீதியிலும் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் வட்டாரங்கள் ஒன்றை அங்கத்தவர் வட்டாரங்களாகும். மன்னார் நகரசபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, வவுனியா நகரசபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபைகளில் ஒருசில இரட்டை அங்கத்தவர்கள் வட்டாரங்கள் இருக்கின்றன.

முப்பத்தினான்கு உள்ளூராட்சி சபைகளில் மிகக் குறைந்தது 175 பெண்கள் அங்கத்தவர்களாக இருப்பர். அல்லது இத் தொகையிலும் கூடுதலாகவும் இடம்பெறுவர். பெண்களை வலுவூட்டல் மூலம் சமூக-பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்த முடியும் என்ற நிலைக்கேற்ப முதல் முறையாக உள்ளூராட்சி சபைகளுக்கு வரும் பெண்கள் சமுதாய அபிவிருத்தியை முன்னெடுக்க வழி பிறக்கும் எனக் கருத இடமுண்டு. சபைகளில் பெண்களின் பிரசன்னம் 25% அல்லது அதற்கு மேல் இருக்கும் பொழுது சபை நடவடிக்கைகளை ஒழுங்காகவும் அமைதியாகவும் நடத்த உதவியாக அமையும். மேலும் ஊழல் செயற்பாடுகளைக் குறைக்க முடியும். மேலும் உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களின் அடிமட்ட அபிவிருத்தியை முன்னெடுப்பவர்களாக புறந்தள்ளப்பட்ட, எல்லைப்படுத்தப்பட்ட நலிந்த பிரிவினரின் வாழ்வை மேம்படுத்தவும் பெரும் பணிகள் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

வட்டார நிர்ணயம் 2012 குடித்தொகைக் கணக்கை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. 2012 குடிக்கணிப்பிற்குப் பிறகு வடக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றத்தால் எண்ணிக்கையிலும் பரம்பலிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இடம்பெயர்ந்த தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர் மீளக்குடியேறி வருகின்றனர். மீள்குடியேற்றத்திற்கு அப்பால் திட்டமிட்ட குடியேற்றங்கள் வவுனியா தெற்கு



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

சிங்களப் பிரிவிலும் வெலிஓயா பகுதியிலும் இடம்பெற்று வருகின்றன. வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு 2012இல் 13,118 பேர் இருந்துள்ளனர். இன்று 25,000 பேருக்கு மேல் இருப்பதாக மாவட்டத் தரவுகள் காட்டுகின்றன. இதுபோல வவுனியா வடக்குப் பிரதேச சபையினதும் கரைதுறைப்பற்று பிரதேச சபையினதும் குடித்தொகை விபரங்கள் 2012 இல் இருந்ததைவிட பெரியளவு வேறுபாடு ஏற்பட்டு இருக்கலாம். இதுபோல வலிகாமம் வடக்கு பிரதேச சபைப் பகுதியில் மீள்குடியேற்றம் ஏற்பட்டுக் கொண்டு இருப்பதால் இப் பிரதேச சபையின் மக்கள் தொகையில் பெரிய வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

மடுப் பிரதேச செயலகப் பிரிவிற்கு தனியான பிரதேசசபை இல்லாததால் இப்பிரதேச பிரிவுக்குட்பட்ட ஆறு கிராம அதிகாரி பிரிவுகள் - கட்டையடம்பன் வட்டாரமாக நானாட்டான் பிரதேச சபைக்குள் வருகின்றது.

(தொடரும்)




# லக்ஷ்மி கடாட்சம்

முன்னொரு காலத்தில் மாமுனிவர் ஒருவர் காட்டில் தவம் செய்து வந்தார். சிறு வயதிலிருந்தே தவக்கோலம் பூண்டு இறைவனை தொழுது வந்ததால், அந்த காட்டில் வசித்த கொடிய மிருகங்கள் கூட அவரிடம் குழந்தைகளை போல நடந்து கொண்டன.

ஒரு நாள் அவர் முன் அழகிய பெண் ஒருத்தி தோன்றினாள். அவளது பேரழகு பிரமிக்க வைத்தது. இருப்பினும் மனம் சலனப்படாமல் அந்த அழகியை பார்த்து, "அம்மா நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"நான் தான் மகாலட்சுமி என்னுடைய விதி பயனால் சில நாட்கள் உங்களுடன் வசிக்க வந்துள்ளேன். நீங்கள் என்னை உதறி தள்ளினாலும் உங்களை விட்டு நான் போகமாட்டேன். பிரம்மன் கட்டளைப்படி நான் உங்களுடன் இருந்தாக வேண்டும்," என்றாள்.

மகாலட்சுமி போகமாட்டாள் என்பதை அறிந்த முனிவர் அந்த ஒப்பந்தத்திற்கு சம்மதித்தார்.

"அம்மா நீங்கள் வரும் பொழுது என்னிடம் சொல்லி கொண்டு வந்தது போல போகும் போது சொல்லி கொண்டே போக வேண்டும்," என்றார்.

லட்சுமியும் சம்மதித்தாள். அன்றிலிருந்து தன் மீது லட்சுமியின் அருள் பூரணமாக இருப்பதை அறிந்தார். அதை சோதித்து பார்க்க விரும்பினார் முனிவர். எனவே, காட்டை விட்டு பொற்குன்றம் என்ற மாநகரை அடைந்தார். அந்த அரண்மனையின் அரசரும் மந்திரிகளும் அமர்ந்திருந்தனர்.

வேகமாக சென்ற முனிவர் தனது இடது காலை தூக்கி மன்னனது கிரீடத்தை ஒரு உதை விட்டார். மறுநிமிடம், "அடி! உதை அவனை பிடி!" என்றபடியே ஆயிரம் சேவகர்கள் முனிவரை சூழ்ந்து கொண்டனர்.

உடனே அரசன், "முனிவரை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் திரிகாலமும் உணர்ந்த ஞானி. என் கிரீடத்தை பாருங்கள்," என்றான்.

கிரீடத்தில் விஷநாகம் ஒன்று படமெடுத்து கொண்டிருந்தது. உடனே எல்லோரும் மகா புருஷரை திட்டி விட்டோமே என்று நினைத்து வருந்தினர். அதற்குள் விஷநாகம் ஓடி மறைந்தது. உண்மையில் அது விஷ நாகமல்ல லட்சுமி தான் நாக உருவெடுத்து முனிவரை காப்பாற்றினாள்.



அன்றிலிருந்து அரசன் மாமுனிவருக்கு மந்திரி பதவி கொடுத்து சர்வ அதிகாரமும் கொடுத்தான். முனிவருக்கு லட்சுமி கடாட்சம் இருந்ததால் அவர் செய்ததெல்லாம் பலித்தது. முனிவரும் நாட்டை நல்லமுறையில் ஆண்டார்.

இரண்டு வருடங்கள் ஓடின. மீண்டும் ஒரு நாள் தன்னுடன் லட்சுமி இருக்கிறாளா என்பதை அறிய விரும்பினார் முனிவர். அன்றிரவு அரசனும், அரசியும் தூங்கிக் கொண்டிருந்த பள்ளியறைக்கு சென்றார். இருவரையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.

தொடரும்....




- 1255 - அசிசியின் புனித கிலாராவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1580 - சேர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றி வந்தார்.
- 1687 - ஏத்தன்சு நகரத்தை முற்றுகையிட்ட ஓட்டோமான் படையினரிடம் இருந்து நகரைக் கைப்பற்ற மரோசினி தலைமையிலான வெனிசியப் படையினர் குண்டுத் தாக்குதலை நடத்தியதில் ஏத்தன்சின் பார்த்தினான் நகரம் பகுதியாக அழிந்தது.
- 1777 - பிரித்தானியப் படைகள் பிலடெல்பியா நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர்.
- 1783 - மாசசூசெட்சில் ஆயுதக் கிளர்ச்சி ஷேய்சின் கிளர்ச்சி ஆரம்பம்.
- 1907 - நியூசிலாந்து, நியூபவுண்லாந்து இரண்டும் பிரித்தானியப் பேரரசின் டொமினியன்களாயின.
- 1918 - முதலாம் உலகப் போர்: அமெரிக்க வரலாற்றிலேயே அதிக இரத்தம் சிந்திய போர் மியூஸ்-ஆர்கன் தாக்குதல் பிரான்சில் ஆரம்பம்.
- 1934 - ஆர்.எம்.எசு. குயீன் மேரி நீராவிக்கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: மார்கெட் கார்டன் நடவடிக்கை தோல்வியடைந்தது.
- 1950 - ஐக்கிய நாடுகள் படைகள் வட கொரியாவிடமிருந்து சியோல் நகரை மீண்டும் கைப்பற்றினர்.
- 1950 - இந்தோனீசியா ஐநாவில் இணைந்தது.
- 1954 - ஜப்பானில் இடம்பெற்ற புயலில் சிக்கி கப்பல் ஒன்று மூழ்கியதில் 1,172 பேர் கொல்லப்பட்டனர்.
- 1960 - ஐக்கிய அமெரிக்காவில் முதற் தடவையாக அரசுத்தலைவருக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களின் தொலைக்காட்சி நேரடி விவாதம் ரிச்சார்ட் நிக்சனுக்கும் ஜோன் எஃப். கென்னடிக்கும் இடையில் இடம்பெற்றது.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ சோவியத் ஒன்றியத்துக்கான தமது ஒத்துழைப்பை அறிவித்தார்.
- 1962 - யேமன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1983 - அணுவாயுதம் ஒன்று ஏவப்பட்டது என்ற அறிக்கை ஒரு கணினித் தவறு என்பதைச் சோவியத் இராணுவ அதிகாரி ஸ்டானிசுலாவ் பெத்ரோவ் கண்டுபிடித்து அணுவாயுதப் போரொன்று இடம்பெறுவதைத் தவிர்த்தார்.
- 1984 - ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கை சீனாவிடம் கையளிக்க ஒப்புக் கொண்டது.
- 1987 - தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் லெப்டினன் கேணல் திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணாநோன்பு இருந்து உயிர்துறந்தார்.
- 1997 - இந்தோனேசிய விமானம் மெடான் அருகே விபத்துக்குள்ளாகியதில் 234 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - செனெகல் நாட்டு கப்பல் ஒன்று காம்பியாவில் மூழ்கியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 2007 - வியட்நாமில் பசாக் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுக்கொண்டிருந்த பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 60 தொழிலாளர்கள் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

பிறப்புகள்

- 1820 - ஈஸ்வர சந்திர வித்யாசாகர், இந்திய மெய்யியலாளர், ஓவியர். (இ. 1891)
- 1833 - சார்ல்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல்வாதி (இ. 1891)
- 1849 - இவான் பாவ்லோவ், நோபல் பரிசு பெற்ற உருசிய மருத்துவர் (இ. 1936)
- 1867 - வின்சர் மெக்கே, அமெரிக்க இயங்குபடக் கலைஞர் (இ. 1934)
- 1886 - ஆர்ச்சிபால்ட் ஹில், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர் (இ. 1977)
- 1890 - பாபநாசம் சிவன், கருநாடக இசை அறிஞர் (இ. 1973)
- 1897 - ஆறாம் பவுல் (திருத்தந்தை) (இ. 1978)
- 1908 - பெரியசாமி தூரன், கருநாடக இசை அறிஞர் (இ. 1987)
- 1913 - திருக்குறள் வீ. முனிசாமி, தமிழறிஞர் (இ. 1994)
- 1923 - தேவ் ஆனந்த், இந்திய நடிகர், இயக்குநர் (இ. 2011)
- 1926 - வ. விஜயபாஸ்கரன், தமிழக இதழாசிரியர், எழுத்தாளர், (இ 2011)
- 1932 - மன்மோகன் சிங், இந்தியாவின் 13வது பிரதமர்
- 1954 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (பி. 1876)
- 1959 - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, இலங்கையின் 4வது பிரதமர் (இ. 1899)
- 1978 - மன்னே சீக்பான், நோபல் பரிசு பெற்ற சுவீடிய இயற்பியலாளர் (பி. 1886)
- 1987 - திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் (பி. 1963)
- 2010 - குளோரியா ஸ்டுவர்ட், அமெரிக்க நடிகை (பி. 1910)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 100 | 140 | 120 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 85 | 120 | 160 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 270 | 240 | 350 | 400 | 250 |
| தக்காளி | 200 | 250 | 100 | 120 | 140 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 80 | 80 | 60 | 80 |
| கோவா | 100 | 120 | 70 | 100 | 100 | 120 | 70 |
| கரட் | 100 | 200 | 80 | 160 | 150 | 200 | 70 |
| பூசணி | 60 | 30 | 30 | 40 | 40 | 60 | 30 |
| புடோல் | 80 | 120 | 50 | 100 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 250 | 150 | 140 | 250 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 75 | 140 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 300 | 600 | 230 | 300 | 300 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 50 | 60 | 100 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 70 | 100 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 40 | 80 | 50 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 200 | 90 | 120 | 140 | 200 | 100 |
| பீற்றூட் | 50 | 40 | 30 | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 150 | 200 | 110 | 120 | 140 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 130 | 160 | 150 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 250 | 130 | 160 | 180 | 200 | 150 |
| கத்தரிப்புள்ள | 140 | 100 | 100 | 100 | 120 | 120 | 120 |
| கீரை-பிடி | 40 | 30 | 20 | 40 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 300 | 350 | 400 | 250 |
| தேங்காய (ஒன்று) | 80 | 100 | 70 | 90 | 70 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 300 | 500 | 250 | - | - | 400 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 120 | 200 | 180 | 200 | 250 |
| முள்ளங்கி | 60 | 100 | 25 | 80 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 07 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 25 | 60 | - | 80 | 130 |

சுதந்திரம் பெறாதிருப்பது நல்லது. எப்போது?
பெற்றும் நாம் வாழ முடியாதபோது.
- கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தியாகி திலீபனின் அகிம்சையை பாடவிதானத்தில் சேருங்கள்

மகாத்மா காந்தி இறந்தபோது ஓர் அறிஞன் சொன்னான் காந்தி என்றொருவர் இருந்தாரா என எதிர்கால சந்ததி கேட்கும் என்று? அந்த அறிஞனின் வார்த்தை அர்த்தமுடையது.

நாற்பது நாள் உப்புச்சாத உண்ணாவிரதத்தை மகாத்மா காந்தி மேற்கொண்டிருக்க முடியாது என்ற எதிர்கால சந்ததியின் ஐயமே காந்தி என்றொருவர் இருந்தாரா? என்ற கேள்வி எழுவதற்குக் காரணமாக இருக்கும் என்பதே அந்த அறிஞன் கூறிய கருத்துக்கான அடிப்படையாகும்.

எனினும் காந்திய தேசத்துக்கே ஈழத் தமிழன் அகிம்சையை போதித்தான் எனும் போது, அந்த அறிஞன் கூறியது போன்று, தியாகி திலீபன் என்றொருவர் இருந்திருக்க முடியுமா? உண்ணாநோன்பிருந்து அவர் இறந்திருக்க முடியுமா? என்று எங்கள் எதிர்காலச் சந்ததியும் உலகும் கேட்குமளவுக்கு இன்றைய நிலைமை உள்ளது.

ஆம், பன்னிரண்டு நாட்கள் உண்ணாநோன்பிருந்து தன் உயிரைத் தியாகம் செய்த தியாகி திலீபன் பற்றிய வரலாறுகள் எங்கள் எதிர்காலச் சந்ததியினரிடம் எவ்வாறு கைமாறப்படுகிறது - பங்கீடு செய்யப்படுகிறது என்பதைப் பார்க்கும் போது,

அந்த அறிஞனின் கருத்தை மீள்வாசிப்புச் செய்வதில் தவறில்லை என்றே கூறவேண்டும்.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தியாகி திலீபனின் நினைவு நாட்கள் பாடசாலைகள் தோறும் அனுஷ்டிக்கப்பட்டன.

சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், மக்கள் கூடுகின்ற முக்கியமான இடங்கள் என எங்கும் தியாகி திலீபனின் தியாகம் போற்றப்பட்டது; எடுத்தியம்பப்பட்டது.

ஆனால் இன்று நிலைமை அதுவன்று. தியாகி திலீபனின் நினைவேந்தல் நடக்கின்றதாயினும் அதன் தாற்பரியம் மாணவர் மத்தியில் எடுத்துச் செல்லப்படவில்லை.

தியாகி திலீபன் தன்னுயிரை ஈகம் செய்த செப்ரெம்பர் 26ஆம் நாளிலேனும் தமிழ்ப் பாடசாலைகள் தியாகி திலீபனை நினைவுகூர்ந்து அகிம்சையின் உன்னதத்தை மாணவர்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்.

எனினும் இதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை என்றே கூறலாம். அகிம்சை என்பது யாருக்கும் எதிரானதன்று.

அது நீதியை நிலைநாட்டுவதற்கான மிக உன்னதமான வழி. இந்த வழியை மகாத்மா காந்தி பின்பற்றினார். தொடர்ந்து தியாகி திலீபன் மேற்கொண்டார்.

கத்தியின்றி இரத்தமின்றி தன்னை வருத்தி நீதியை; உரிமையை; சுதந்திரத்தை நிலைநாட்டுதல் என்பது போற்றப்பட வேண்டும்.

தியாகி திலீபன் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தவர். எனவே அவரைப் போற்றுதல் ஆகாது என்று யார் நினைத்தாலும் அஃது தியாகி திலீபனுக்கு எதிரானதல்ல. மாறாக அகிம்சைக்கு எதிரானது.

அகிம்சை பலவீனப்படுமாக இருந்தால், அகிம்சையைப் போற்றுவதற்குத் தடைவிதிக்கப்படுமாக இருந்தால் ஒரு கண்ணியமான போராட்டம் ஓரங்கட்டப்படும் என்பதோடு, மகாத்மா காந்தியின் அகிம்சை ஒதுக்கப்படுகிறது என்பதாகப் பொருள் கொள்ளப்படும் என்பதால்,

தியாகி திலீபனின் அகிம்சைப் போராட்டம் தமிழ்ப் பாடத்திலேனும் இடம்பெற வேண்டும். அப்போதுதான் அகிம்சை உணர்வு மாணவர்களிடம் வீரியம் பெறும்.

# ஆரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் உணவுப் பொருட்கள் இறக்குமதிக்கு தடை

## ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

(களுத்துறை)

அத்தியாவசியமற்ற உடல ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் அனைத்து உணவு பொருட்களினதும் இறக்குமதியை நிறுத்துவதற்கு தேசிய பொருளாதார பேரவை ஊடாக நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் களுத்துறை போம்புவல சேவைக்கால பயிற்சி நிறுவனத்தின் விவசாய கண்காட்சியை ஆரம்பித்து வைக்கும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் இறக்குமதிக்கு மட்டும் 2500 கோடிக்கு கூடுதலான பணம் செலவிடப்படுவதாகவும் ஆயிரக்கணக்கான ஆண்டு நாட்டின் பண்பாட்டையும் தனித்துவத்தையும் பாதுகாத்து எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டியது கட்டாயமானதென்று தெரிவித்த ஜனாதிபதி, உள்நாட்டு விவசாயிகளின் உற்பத்திகளுக்கு சிறந்த விலையை வழங்கி அவர்களது பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டுமாயின் எமது பொருட்களுக்கு கூடுதல் பெறுமானம் வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களில் நாட்டில் ஏற்பட்ட வரட்சி மற்றும் வெள்ளம் காரணமாக விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்து நாட்டின் விவசாயத்துறையில் புதிய மாற்றத்தை உருவாக்குவதற்காக தேசிய உணவு உற்பத்தி மறுமலர்ச்சி திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படுவதாகவும் அதற்காக அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்று நிருபங்கள் மற்றும் ஆலோசனைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்நாட்டு வெங்காய விவசாயிகள் முகங்கொடுக்கும் நெருக்கடியை கருத்தில் எடுத்து உடனடியாக செயற்படும் வண்ணம் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கு நூறு வீத வரியை விதிக்குமாறு நிதி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாய மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அரச மற்றும் தனியார் துறையில் உள்ள அனைத்து காணிகளிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள எதிர்பார்ப்பதுடன், விவசாயத்தில் ஈடுபடுபவர்களை ஊக்குவிப்பதுடன், விவசாயத்தில் ஈடுபடாதோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, சட்டம் மற்றும் அரசியலமைப்பு அமைவாகவன்றி மனிதாபிமான செயலாக கருதி நாட்டின் வறுமையை அகற்றி அனைத்து மக்களினதும் பட்டினியை போக்கும் விவசாய மறுமலர்ச்சியுடன் அனைவரும் இணைந்து கொள்வார்களென நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72-வது பொதுச் சபையின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அமெரிக்க விஜயம் தொடர்பிலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமை ப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளினதும் நட்புற வும் ஆசீர்வாதமும் குறைவின்றி இலங்கைக்கு கிடைத்திருப்பது அதன் போது தெரிய வந்ததாகவும் தெரிவித்தார்.

விவசாய கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்ட ஜனாதிபதி, 46 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட போம்புவல சேவைக்கால பயிற்சி நிறுவனத்தின் இருமாடிக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

“வளமான வாழ்வுக்கு - விவசாயமே பலம்” எனும் தொனிப்பொருளிலான விவசாய மறுமலர்ச்சி தேசிய திட்டத்தின் கீழ் மேல் மாகாண விவசாய அமைச்சும் மாகாண விவசாய திணைக்களமும் ஏற்பாடு செய்துள்ள கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம்பெறும்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க, மேல் மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, மேல் மாகாண விவசாய அமைச்சர் காமினி திலக்க சிறி உள் ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (மு-11)

## துன்னாலை வன்முறைச் சம்பவம் மேலும் ஐவர் கைதாகினர்

(கரணவாய்)

துன்னாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி அன்று ஹன்டர் வாகனம் ஒன்றில் மணல் கடத்தி வந்தோர் மீது குடத்தனைப் பகுதியில் வைத்து பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் பொலிஸாரின் ஜீப், காவலரண் என்பன சேதமாக்கப்பட்டது.

மேலும் பாதுகாப்புக்கு அழைக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினரின் பவல் கவச வாகனமும் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.

அத்துடன் கடலோர பாதுகாப்புப் பணிகளை முடித்துவிட்டு முகாம் திரும்பிய கடற்படையினர் மீதும் மணல் கடத்தி வந்தோர் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனையடுத்து நிலைமையினைக் கட்டுப்படுத்தி சட்டத்தை நிலைநாட்டுவதற்காக விசேட அதிரடிப் படையினர் களம் இறக்கப்பட்டு துன்னாலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு 30 பேர் வரையானோர் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் தொடர்ச்சியாக கடந்த வாரம் வரையில் 45 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தற்போது மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்து நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நெல்லியடிப் பொலிஸாரால் இருவரும் நேற்றுத் திங்கட்கிழமை நெல்லியடிப் பொலிஸாரால் இருவருமாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை இச்சம்பவத்துடன் தொடர்புடைய 50 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (மு-60)

### வாகன விபத்து ஒருவர் படுகாயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளும் வானும் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் மானிப்பாய் சந்தியில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மானிப்பாய் ஆலடி வீதியைச் சேர்ந்த நாகேஸ்வர சர்மா ஜெனார்த்தன சர்மா (வயது-44) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

## கஞ்சாவை வைத்திருந்தவருக்கு 3 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம்

(யாழ்ப்பாணம்)

கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த நபருக்கு 3 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இளவாலைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து 1200 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த நபர் கடந்த 24ஆம் திகதி பனிப்புலம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு நேற்று மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே 3 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (மு-10,104)

## நவராத்திரி பாமாலை

செல்வத்துக்கு இன்று 3ஆம் நாள்



### லக்ஷ்மி புகழ் பாடுவோம்

செல்வத் திருமகளே! மோகன வல்லியே!
எல்லோரும்கொண்டாடும் வேதவல்லியே!
எண் கரங்களில் சங்கு சக்கரம்
வில்லும் அம்பும் தாமரை
மின்னும் கரங்களில் நிறைகுடம்
தளிர்த் தாம்புலம் அணி சியாமளையே!
வரத முத்திரை காட்டியே
பொருள் வழங்கும் அன்னையே!
சிரத்தினில் மணிமகுடம்
தாங்கிடும் சிந்தாமணியே
பல வரம் வழங்கிடும் ரமாமணியே!
வரதராஜ சிகாமணியே
தாயே தனலட்சுமியே!
சகல வளமும் தந்திடுவாய்

வ.தயாதீசன்

# 13 ஆவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தை சுவீகரித்த யாழ்.பல்கலை.



பதுளை. வின்சன்ட் டயஸ் அரங்கில் நடைபெற்ற 2017ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் பேராதனை பல்கலைக்கழகத்தை வீழ்த்தி யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழகம், 19 தடவைகள் நடைபெற்ற பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கால் பந்து சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் 13 ஆவது தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். யாழ். பல்கலைக்கழகம் 1979, 1980, 1992, 1995, 1998, 2001, 2005, 2009, 2011, 2013, 2014, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிண்ணத்தை வென்றுள்ளது. 2010 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு 1977, 1982, 2004 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது.

அரையிறுதியில் பலம்கொண்ட யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழக அணிகள் மோதியபோது இரு அணிகளாலும் கோல் போட முடியவில்லை. இதனால் பனால்டி முறையில் யாழ்.பல்கலைக்கழகம் 4-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வென்றது.

மற்றைய அரையிறுதிப் போட்டி 1-1 என்ற கோல் வித்தியாசத்தில் சமனான நிலையில், பேராதனை பல்கலைக்கழகம் பனால்டி உதைகளால் 4-3 என்ற கோல்கள் வித்தியாசத்திலஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை வென்றது.

குழு நிலைப் போட்டியில் பனால்டிகளால் தோற்றதற்கு பதிலடியாக மொரட்டுவை பல்கலைக்கழகம், ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தை 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தி 3ஆம் இடத்தைப் பிடித்தது.

இந்த தொடரின் A குழுவில் யாழ்.பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம், ருஹுனு பல்கலைக்கழகம் இடம்பிடித்தன. B குழுவில் ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் ஆகியன விளையாடின. தென் கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் ரஜரட்ட பல்கலைக் கழகம் C குழுவில் பங்கேற்றதோடு குழு D இல் கொழும்பு பல்கலைக் கழகம், சப்ரகமுவ பல்கலைக் கழகம், வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகம் இடம்பிடித்திருந்தன.

இதன்படி A குழுவில் இருந்து யாழ் மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்கள் காலிறுதிக்கு தகுதி பெற்றதோடு B குழுவில் இருந்து மொரட்டுவை மற்றும் ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகங்கள் தகுதி பெற்றன. தென்கிழக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்கள் C குழுவில் இருந்து காலிறுதிக்கு முன்னேறின.

D குழுவில் எந்தப் போட்டியிலும் தோற்காத சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலிறுதிக்கு தகுதி பெற்றது. கொழும்பு பல்கலைக் கழகத்தை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சி அளித்தபோதும் களனி பல்கலைக் கழகம் வயம்பவை வென்றது. இதனால் கொழும்பு பல்கலைக் கழகம் D குழுவில் இரண்டாவது அணியாக காலிறுதிக்கு முன்னேறியது.

காலிறுதியில் ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் கொழும்பு பல்கலைக்கழகத்தை பனால்டி உதைகளின் மூலம் வென்றது. போட்டி 1-1 என்று சமநிலையானதை அடுத்தே பனால்டி சூட் அவுட்டுக்கு சென்றது. தென் கிழக்கு மற்றும் யாழ். பல்கலைகழகங்களுக்கு இடையிலான போட்டி 90 நிமிட முடிவில் பெரும் பரபரப்போடு 2-2 என்ற கோல்களால் சமனானது. எனினும் பனால்டி உதை மூலம் யாழ்.பல்கலைக்கழகம் 4-2 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

மூன்றாவது காலிறுதியில் சப்ரகமுவ பல்கலைக்கழகம் முதல் பாதியில் கோல் ஒன்றை போட்ட போதும் மொரட்டுவை பல்கலைக் கழகம் மேலதிக நேரத்தில் கோலொன்றை போட்டு சமநிலை செய்தது. இதனால் பெனால்டி மூலம் போட்டியில் மொரட்டுவை பல்கலைக் கழகத்தால் வெற்றியை உறுதி செய்ய முடிந்தது. விறுவிறுப்புடன் இடம்பெற்ற நான்காவது காலிறுதியில் பேராதனை பல்கலைக் கழகம் 3-2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தை வீழ்த்தியது. (க)

## இளங்கதிர் விளையாட்டுக் கழகம் கால் இறுதிக்கு தகுதி பெற்றது



சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டு கழகம் நடத்திய மென்பந்து சுற்று போட்டியில் முதலாவது போட்டியில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டு கழகத்தை விழ்த்தியும் இரண்டாம் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டு கழகம் விழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றது. இளங்கதிர் விளையாட்டு கழகம். (க)

## ஆவரங்கால் மத்தி சம்பியன்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்திய வி.சிவகுருநாதன் ஞாபகர்த்தமான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்று போட்டியின் இறுதி போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டு கழகத்தை வீழ்த்தி ஆவரங்கால் மத்தி சம்பியன் ஆனது. (க)

## மீண்டும் இறுதி ஆட்டம் ஒன்றில் வீனஸ் விளையாட்டுக் கழகம்



அல்வாய் யுத் விளையாட்டுக் கழகம் நடத்திய 21 வயதுக்கு உட்பட்ட கழகங்கட்கிடையே நடத்தப்பட்ட 8பேர் 6ஓவர் கொண்ட துடுப்பாட்ட போட்டியில் முதலாவது போட்டியில் கரவெட்டி மகேஷன் அணியையும் 2ஆவது போட்டியில் புலோலி யுத் அணியையும் அரை இறுதியில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தையும் வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்கு வினஸ் விளையாட்டுக் கழகம் தெரிவு.(க)

# இராணுவ முகாம் அருகிலிருந்து எரிந்த நிலையில் சடலம் மீட்பு

(மன்னார்)

மன்னார்- யாழ்ப்பாணம் பிரதான வீதி, தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் உள்ள காட்டு பகுதியில் இருந்து எரிந்த நிலையில் ஆண் ஒருவருடைய சடலத்தை நேற்று மாலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் அடையாளம் தெரியாத சடலம் காணப்படுவதாக மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் சுமார் 50 வயதுடைய ஆண் ஒருவர் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடல் முழுவதும் எரிந்த நிலையில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்திற்கு மன்னார் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (மு-11)

## நாடு பிளவுபடாமல்...

கண்டி டெவோன் ரெஸ்ட்டில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தை கொண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி, 17 வருடங்களில் அதனை அமுல்படுத்தியது. அன்று, அதனை எதிர்த்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அந்த அரசியல் அமைப்பை 23 வருடங்கள் அமுல்படுத்தியது. இன்னும் அதனையே அமுல்படுத்த சிலர் கேட்கின்றனர். அவர்கள், இவ்வாறு இந்த அரசியல் அமைப்பையே அமுல்படுத்துவதற்கு கேட்கும் காரணங்கள் இரண்டு உள்ளன. ஒன்று, இந்த அரசியல் அமைப்பின் மூலம் கிடைக்கும் அதிகார ருசி, மற்றது, இனவாதம்.

1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில், இனவாதம் இருப்பதாக, மேலோட்டப் பார்வையில் தெரிவதில்லை. இருந்தபோதும், கடும்போக்குடைய சில சிங்கள அரசியல்வாதிகள், பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் எப்போதும் சிங்களவர் ஒருவரே ஜனாதிபதியாக வரமுடியும் என்று சிந்திக்கின்றார்கள் என்றார்.

இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்த, புதிய அரசமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க கூறியதாவது,

இலங்கையில் இதுவரையில் உருவாகியுள்ள எந்த ஓர் அரசியல் அமைப்புக்கும் மக்கள் யோசனைகளைக் கருத்தில் கொள்ளவில்லை. இருந்தபோதும், முதல் முதலாக புதிய அரசியல் யாப்புக்கு பரந்த அளவில் மக்கள் யோசனைகள் பெறுக்கொள்ளப்பட்டன. எனது தலைமைத்துவத்தில் இயங்கும் குழு, நாடு முழுதும் சென்று மக்கள் கருத்துகளை கேட்டபோது 2,516 பேர் நேராக கருத்துத் தெரிவித்ததுடன், எழுத்து மூலம் 3,000க்கும் மேற்பட்டவர்களும் இயக்கங்களும் தமது கருத்துகளை தெரிவித்தனர். ஆகவே, அனைத்து மக்களுக்கும் பொருந்தக் கூடிய, நீண்ட காலத்துக்கு பொருத்தமான ஒரு யாப்பை உருவாக்குவதே நோக்கமாகும் எனத் தெரிவித்தார். (மு-11)

## கர்ப்பிணி படுகொலை...

திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ் அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் எனும் பிரதேசத்தில் வீட்டில் தனித்திருந்த ஏழு மாத கர்ப்பிணி பெண்ணொருவர் இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இதன்போது அவரது வயிற்றில் இருந்த ஏழு மாத கருவும் கொல்லப்பட்டிருந்தது.

இக் கொலை சம்பவம் தொடர்பாக உடனடியாகவே விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவம் தொடர்பாக இருவரை கைது செய்திருந்தனர். அத்துடன் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கானது விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரத்த மாதிரிகள், மற்றும் சந்தேக நபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரத்த மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை ஊர்காவற்றுறை பொலிஸாரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அதனை தொடர்ந்து குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் உத்தரவிட்டார். (மு-4)

## நாடு திரும்பினார்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை அமர்வில் பங்குபற்றிய மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பதுடன், நாடு என்ற வகையில பின்பற்றப்படும் கொள்கைகளை ஜனாதிபதி இதன்போது அரச தலைவர்களின் சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## லலித் ஜயசிங்க...

நபர் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட விசாரணைப் பிரிவினரால் நேற்று முற்பகல் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட சிலரால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் விசாரணைகள் தொடர்பிலான தகவல்களை மறைத்தமை குறித்து வாக்குமூலம் பதிவு செய்வதற்காக நேற்று முற்பகல் அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## நீதிமன்றத்தால்...

வொன்றில் கலந்து கொண்டு, பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது. நீதிமன்றங்கள் நீதி முறைமையின் கீழ் செயற்படுகின்றதா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்காக மாத்திரமே உள்ளது.

நாட்டை ஆட்சி செய்வதற்கு ஜனாதிபதியொருவர் இருக்கிறார். அத்துடன் நாடாளுமன்றமும் உள்ளது. மேலும் மாகாண சபைகளும் அமைக்கப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டியுள்ளார். (மு-11)

ஐ.நா பிரதான மண்டபத்தில்

# வைகோவுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட சிங்களப் பெண்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, தமிழின உணர்வாளரும், ம.தி.மு.கவின் தலைவருமான வைகோவுடன் சிங்களப் பெண் ஒருவர் கடுமையாக தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமையின் 36 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதில் கலந்து கொள்வதற்காக பல நாடுகளில் இருந்தும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வருகை தந்துள்ளனர்.

இதன்போது, இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கோரி இந்தியாவிலிருந்து ஜெனிவா சென்றுள்ள வைகோவுடன், இலங்கையிலிருந்து ஜெனிவா சென்றுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் வீரசேகர குழுவில் அங்கம் வகிக்கும் பெண் ஒருவர் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து வைகோ கருத்து தெரிவிக்கையில்,

நீ தமிழ் நாட்டிலிருந்து வந்து இலங்கையைப் பற்றி பேச உனக்கு என்ன தகுதி உள்ளது? நீ யார்? என கேள்வி கேட்டார். இதன்போது குறித்த சிங்கள பெண்ணுக்கும் வைகோவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பெண்ணுடன் வந்திருந்த ஆண்களும், முன்னாள் இராணுவ அதிகாரிகளும் வந்து தன்னை பயமுறுத்தியதாகவும் வைகோ குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# பெரிய வெங்காயத்துக்கு நூறு வீத வரி அறவீடு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கு நூறு வீதம் வரி அறவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

நிதியமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் நேற்று நள்ளிரவு முதல் உடனடியாக இந்த புதிய வரி நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்ற அமெரிக்காவுக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திங்கட்கிழமை அதிகாலை நாடு திரும்பினார். நாடு திரும்பிய ஜனாதிபதி உடனடியாக இந்த வரி அதிகரிப்பு உத்தரவை நிதியமைச்சுக்கு விடுத்துள்ளதாக, உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

உள்ளூர் வெங்காய உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இவ்வாறு நூறு வீதமும் வரி அறவிடும் யோசனையை ஜனாதிபதி முன்வைத்ததாகவும்,

அடுத்த நிதியாண்டுக்கான வரவு செலவு திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் ஜனாதிபதியின் இந்த உத்தரவு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இருவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

மணல் கடத்தி வந்தோர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நளினி சுபாகரன் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஜீலை மாதம் 09ஆம் திகதி குடத்தனைப் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து அன்று கடமைக்குச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களை நேற்று மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தியபோது 09.10.2017 வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (மு-60)

# கடற்படையின் முன்னாள் பேச்சாளர் தசநாயக்கவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கப்டன் டி.கே.பி.தசநாயக்கவின் விளக்கமறியலை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2008 ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு மற்றும் கொழும்பின் புறநகர் பகுதிகளில் 11 தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து, இவரை மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (மு-11)

## சிறைச்சாலை உத்தி...

செயல் ஒன்றுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நேற்றைய தினம் பார்வையிடுவதற்காக அவருடைய மகன் சிறைச்சாலைக்கு வந்துள்ளார். அப்போது தனது தகப்பனார் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், அதிகாரிகளால் கடுமையாக தாக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார்.

காரணம் தெரியாமல் தந்தையை தாக்கியதாக தெரிவித்து குறித்த சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி நேற்றைய தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ்பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (மு-9)

நடப்பாண்டில்

# வீதி விபத்துக்களால் 1789 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்துக்களில் 1789 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த வருடத்தின் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 31ஆம் திகதி வரை இடம்பெற்ற விபத்துக்களில் 533 பாதசாரிகள் உயிரிழந்துள்ளதாக தேசிய வீதி போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் சாரதிகள் 588 பேர் உயிரிழந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து பயணித்து விபத்திற்குள்ளாகியதில் 106 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வாகன விபத்துக்களில் 142 சாரதிகள் உயிரிழந்துள்ளதுடன் 256 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

இதுதவிர இந்த காலப்பகுதியில் 164 பாதசாரிகள் உயிரிழந்துள்ளதாக தேசிய வீதிபோக்குவரத்திற்கான அதிகார சபை தெரிவித்துள்ளது. (மு-11)

## இறுதிநாள் நினைவேந்தல் இன்று...

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா நோன்பிருந்த தியாக தீபம் திலீபன் மரணித்த தினம் இன்றாகும்.

இந்த நினைவுதினத்தை முன்னிட்டு தமிழர் தாயகம் எங்கும் நினைவு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பிரதான நிகழ்வாக நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவு தூபி முன்பாக நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நினைவஞ்சலி தொடர்பில் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தியாக தீபம் திலீபன் தன்னுடலை உருக்கி எம் மக்களுக்காக இம் மண்ணை விட்டுப் பிரிந்த இறுதி நாள் நினைவு தினமான இன்று அவரது தியாகங்களை நினைவு கூரும் இறுதி நாள் நிகழ்வுகளாக,

நல்லூரின் வடக்கு வீதியில் தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த இடத்தில் அவரது உயிர் பிரிந்த நேரம் காலை 10.58 மணிக்கு குறித்த இடத்தில் அகவணக்கம் செலுத்தப்படும்.

அதனைத் தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் அனைத்தும் அவரது நினைவுத் தூபியில் இடம்பெறும்.

அத்துடன் நினைவுத் தூபியில் இடம்பெறும் நிகழ்வு ஒழுங்குகள் ஆவன,

- நினைவுத் தூபியில் நிகழ்வுகள் மு.ப 11.10 மணிக்கு ஆரம்பமாகும்.

(நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு பின்புறமாக அமைந்துள்ள நினைவுத் தூபி)

- பொது ஈகச் சுடர் ஏற்றல்
- மலர் மாலை அணிவித்தல்
- மலர் வணக்க நிகழ்வுகள்
- உயிர்த்தியாகம் செய்த மாவீரர்கள் பொது மக்களுக்கு அகவணக்கம்
- நினைவுரைகள்
- கவிதாஞ்சலி நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வு அமைதியாகவும் உணர்வுபூர்வமானதாகவும் அமைய அனைத்து பொது மக்களையும், அரச, அரச சார்பற்ற நிறுவனத்தினரையும், தனியார் துறையினரையும் கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு கோருகின்றோமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-4)

## வடமராட்சி...

வடமராட்சிப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுதிங்கட்கிழமை 25.09.2017 அதிகாலை பருத்தித்துறை வியாபாரிமூலைப் பகுதியில் இருந்து கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினையடுத்து வியாபாரிமூலை சந்திப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞன் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடம் 16.8 கிலோக்கிராம் நிறையுடைய கேரளக்கஞ்சாவினை மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞராவார். அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 33 இலட்சம் என கூறப்படுகிறது. (மு-60)

## காங்கேசன்...

கிணறு ஒன்றை அப்பகுதி மக்கள் சுத்திகரிப்பு மேற்கொண்ட வேளையில் கிணற்றில் வெடி பொருட்கள் கிடப்பது தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தெரிவித்ததை தொடர்ந்து விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பொருட்களை மீட்டுள்ளனர்.

ஆழமான கிணற்று பகுதியில் தொடர்ந்து வெடிபொருட்கள் அடங்கிய பெட்டிகள் கிடக்குமென சந்தேகிக்கும் அதேவேளை ஒரு பெட்டிக்குள் 85 தோட்டாக்கள் அடங்கியிருப்பதுடன் 63 பெட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

வெடிபொருட்கள் மீட்பு பணி நேற்று பிற்பகல் வரை காங்கேசன் துறை பொலிஸார் பிரிவு (I) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாந்த சிசில குமார மற்றும் பொலிஸ் பரிசோதகர் சமன் பிரியதர்சன, இளவாலை பொலிஸ் பரிசோதகர் அனந்தராசா மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (மு-104)

## யாழ் பல்கலைக்...

டத்தில், இடைக்கால வரைபை ஆராய்வதற்கான விசேட நிபுணத்துவக்குழுவொன்று நியமிக்கப்படலாம் எனவும் அந்தக் குழு, வரைபு தொடர்பில் ஆராய்ந்து அதில் உள்ள சாதக பாதகங்களை ஆசிரியர் சங்கத்திற்கு சமர்ப்பிக்கும் எனவும் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

## வித்தியா படுகொலை வழக்...

சிவலோகநாதன் வித்தியா கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் 9 பேர் எதிரிகளாக இனங் காணப்பட்டனர்.

அந்த வகையில் முதலாம் எதிரியான பூ.இந்திரகுமார், 2 ஆம் எதிரியான பூ.ஜெயக்குமார், 3 ஆம் எதிரியான பூ.தவக்குமார், 4 ஆம் எதிரியான ம.சசிதரன், 5 ஆம் எதிரியான நி.சந்திரகாந்தன், 6 ஆம் எதிரியான சி.துசாந்தன், 7 ஆம் எதிரியான ப.குகநாதன், 8 ஆம் எதிரியான ஜெ.கோகிலன், 9 ஆம் எதிரியான ம.சசிகுமார் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றச்சாட்டு பத்திரம் யாழ் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கை நீதாய விளக்க நீதிமன்றில் (ரயல் அட்பார்) விசாரணை செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் பரிந்துரை செய்ததையடுத்து, பிரதம நீதியரசரால் நீதாய விளக்க நீதிமன்றுக்கு மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். அந்த வகையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம்பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நீதாய விளக்கமன்று யூன் மாதம் முதன்முறையாக யாழ் மேல் நீதிமன்றில் கூடியது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி புங்குடுதீவு பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியை வல்லுறவு செய்யும் நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித் திட்டம் தீட்டியமை, வல்லுறவு செய்யும் நோக்கத்துக்காக கடத்தியமை, கூட்டாக சேர்ந்து வல்லுறவு செய்தமை, கூட்டாக சேர்ந்து வல்லுறவு செய்து கொலை செய்தமை போன்ற பிரதான குற்றங்களும் மேற்குறித்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டது.

இதில் 9 ஆம், 4 ஆம் எதிரிகளுக்கு எதிராக பிரதான குற்றச்சாட்டாக, வித்தியாவை வல்லுறவு செய்யும் நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித் திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 2 ஆம், 3 ஆம், 5 ஆம் 6 ஆம் எதிரிகளுக்கு எதிராக மேற்குறித்த நான்கு பிரதான குற்றச்சாட்டுக்களும் சாட்டப்பட்டிருந்தன. 7 ஆம் 8 ஆம் எதிரிகளுக்கு எதிராக மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு உடந்தையாக இருந்துள்ளதாக பிரதான குற்றச்சாட்டுக்களாக முன்வைக்கப்பட்டது.

மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு தாம் சுத்தவாளிகள் என 9 எதிரிகளும் மன்றுரை செய்திருந்தனர். அதனையடுத்து கடந்த யூன் மாதம் 28 ஆம் திகதியில் இருந்து நீதாய விளக்க நீதிபதிகள் மூவர் முன்னிலையில் விளக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

வழக்கு தொடுநர் தரப்பு எதிரிகள் தரப்பு சாட்சியங்கள் என அனைத்து சாட்சியங்களின் விசாரணைகள் முடிவுறும் வரை ஒவ்வொரு முறையும் மன்றில் எதிரிகள் 9 பேரும் ஆஜர்படுத்தப்பட்டனர். அனைத்து விசாரணைகளும் கடந்த செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி முடிவுற்றிருந்த நிலையில் நாளையதினம் குறித்த வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது. (மு-9)

## மரண அறிவித்தல்

### படைவீரசிங்கம் சேனாதிராசா

உரிமையாளர் – ராஜா மெடிக்கல் ஸ்ரோஸ் (சுன்னாகம்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் விழிசிட்டி, தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட படைவீரசிங்கம் சேனாதிராசா 24.09.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான படைவீரசிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் (இளைப்பாறிய ஆசிரியர்) - நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமகளின் அன்புக் கணவரும், கனகசிங்கம் (லண்டன்), மயில்வாகனம் (கிளி - கனடா), காலஞ்சென்ற கதிரவேலு, திருமதி பாக்கியம் தம்பிராசா (கனடா), திருமதி சி.மகேஸ்வரி (மணி - பிரான்ஸ்), அமிர்தலிங்கம் ( (சிவம்) - மருந்துக்கடை இணுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருமதி சௌந்தரேஸ்வரி மகாலிங்கசிவம், திருமதி பாரதிதேவி ஜெயதீசன் (ஓய்வுபெற்ற இலங்கை மத்தியவங்கி ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.09.2017 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் விழிசிட்டி (ஞானவைரவர் கோயில் அருகில்) தெல்லிப்பளையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்பிலாவுடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விழிசிட்டி, தெல்லிப்பளை.
தொ.பேசி. இல. : 021 205 9700, 075 041 0869

தகவல் : மனைவி

(681)

ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2018
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்,
யாழ். இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமையிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 - 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
"சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வி மகிழ்வுடனே ஊட்டுவோம்"
- இயக்குநர்கள்
(C-9737)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
(C-9677)
UK - 550/-Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
5,000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்)
நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படும்
தகுதி: 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம்.
0768226241

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9678)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS - 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

NEW SCIENCE HALL
A/L CHEMISTRY
2019 BATCH வாயுக்கள்
ஆரம்பம் 01.10.2017 SUN 9.30 - 11.30 am
2018 BATCH பௌதிக இரசாயனம்
ஆரம்பம் 01.10.2017 SUN 11.30 - 1.30 pm
DAY CLASS பொது இரசாயனம்
ஆரம்பம் 02.10.2017 MON 9.30 - 11.30 am
(C-9745)
க.சிவத்திரன் B.Sc (Hons)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.